இளையான்குடி இலக்கியங்கள்



# நெல்

சீதக்காதி தமிழ்ப்பணிக் கழகம்
டாக்டர் சாகிர் உசேன் கல்லூரி, இளையான்குடி

இளையான்குடி இலக்கியங்கள் - தொகுதி-1

# நெல்

வெளியீடு :
சீதக்காதி தமிழ்ப்பணிக் கழகம்,
டாக்டர் சாகிர் உசேன் கல்லூரி,
இளையான்குடி.
1980

# நெல்

இளையான்குடி இலக்கியத் தொகுதி-1

முதற் பதிப்பு மார்ச்சு 1980

வெளியீடும் உரிமையும்: சீதக்காதி தமிழ்ப்பணிக் கழகம்,
டாக்டர் சாகிர் உசேன் கல்லூரி,
இளையான்குடி-623 702.

அச்சும், அமைப்பும்: உமா பிரிண்டர்ஸ், இளையான்குடி

PRICE RS. 6.50

# முன்னுரை.

அருளாளனும் அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமம்கொண்டு தொடங்குகிறேன்.

தமிழ்மொழி பழம் பெருமையும் வளமும் நிறைந்தது. பல்வேறு சமயங்கள், மொழிகள் வந்திங்கு ஆதிக்கம் செலுத்திய போதும் தன்வளங் குன்ருது உயர்தனிச் செம்மொழியாய் இன்னும் விளங்குகிறது. உலகப் பெருமொழிகளில் தமிழ் 'பக்திமொழி' என்னும் பேறு பெறுகிறது. பல்வேறு மதத்தினரும் தமிழில் தங்கள் கொள்கைகளைப் பரப்ப இடம்தந்து இனிமை பெறுகிறது. சைவம், வைணவம், பௌத்தம், சமணம், கிறித்துவம், இஸ்லாம் போன்ற எல்லாச் சமயங்களும் வளர இடம்தந்து வாழ்த்துகிறது.

ஆனால் இசுலாமியத் தமிழ் இலக்கியங்கள் காலக் கடலுள் மறைந்து கிடக்கும் முத்துக்களாகவே இருக்கின்றன. சோழர் காலத்திற்குப்பின் காப்பியம் இல்லை என்பவர்களும், இடைக் காலத்தை இருண்ட காலம் என்பவர்களும் ஏனே இசுலாமிய இலக்கியங்களை மறந்துவிட்டுப் பேசுகின்றனர். இது மற்றவர் குற்றமன்று. செந்தமிழ்ச் சோலையிலே 'சீரு' மலரையும், இன்னும் எத்தனையோ சிற்றிலக்கிய அரும்புகளையும் மற்றவர் பாராமுகமாக இருக்கக் காரணம் யார்? தமிழ் முசுலிம்களாகிய நாமே யன்றோ!

எத்தனை இலக்கியங்களுக்கு நாம் உரை எழுதி ஊருக்கு விளங்க வைத்துள்ளோம்! எத்தனை புலவர்களுக்கு விழா எடுத்து உலகிற்கு அறிமுகப்படுத்தியுள்ளோம்? ஏட்டிலே எழுதி, வீட்டிலே முடங்கிப்போன நூல்கள் பல ஆயிரம் உண்டு. எத்தனை பேர் அத்திரவியங்களைத் தேடி எடுத்துத் தூசுதுடைத்து உலகிற்குக் காட்டியுள்ளோம்?

இன்று தமிழகத்திலே எமது டாக்டர் சாகிர் உசேன் கல்லூரி இப்பணி செய்ய முன்வந்துள்ளது. தமிழ் நாட்டில் முசுலிம்கள் உருவாக்கிய பன்னிரெண்டு கல்லூரிகளில் எமது கல்லூரி மட்டுமே தமிழ் இலக்கியத்தைப் பட்ட வகுப்புப் பாடமாகக் கொண்டு சீரிய தொண்டாற்றி வருகிறது.

தமிழ் முசுலிம்களிடையே இளம்பூரணர்களை, நச்சினார்க்கினியர்களை, பரிமேலழகர்களை, அடியார்க்கு நல்லார்களை, உ. வே. சா. க்களை உருவாக்க வேண்டும் என்பதே முதல்வர் கேப்டன் என். ஏ. அமீர் அலி அவர்களின் பேரவா. எங்களது இதயங்களின் எண்ண மின்னலைத் தொடர்ந்த முதல் முழக்கமே சீருக் கருத்தரங்கம். ஐந்தாண்டுகளுக்கு முந்திய அப்பெரு மழையின் பயனாய் விளைந்த 'சீரு ஆய்வுத் திரட்டு' மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் பட்டவகுப்பு தமிழ்ப் பாடப்புத்தகமாக இருந்து வருகிறது. மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தினருக்கு எங்களது இதய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இசுலாமிய சகாப்தம் 14-ஆம் நூற்றாண்டைக் கடந்து. 15-ஆம் நூற்றாண்டில் அடியெடுத்துவைக்கும் இவ்வினிய வேளையில், எமது கல்லூரி பத்தாண்டு நிறைவெய்தும் மகிழ்ச்சிக்குரிய பெர்முதில் எங்களது இலக்கியப் பணியின் அடுத்த கட்டத்தினைத் திட்டமிட்டுச் செயல்படுத்த முனைந்தோம். அதன் விளைவே இசுலாமியத் தமிழிலக்கிய வரலாற்றுக் கருத்தரங்கம். கருத்துக்களை வழங்குவதோடு அமையாது முசுலிம் இளைஞர்களுக்கு முயற்சியையும், முனைப்பையும் உருவாக்கும் பொருட்டு இருட்டிலே முடங்கிக்கிடக்கும் இலக்கியங்களை வெளிச்சத்திற் கொணர்ந்து, ஏட்டிலே தெரியாதிருந்த செல்வங்களை தமிழ் முசுலிம்களின் இதயங்களில் ஏற்றி வைக்க எண்ணினோம். இளையான்குடியில், அம்மண்ணில் வாழ் மக்களுக்கே தெரியாமல் 25-க்கும் அதிகமான புலவர்கள் வாழ்ந்து மறைந்திருக்கிறார்கள். அப்பெரும் புலவர்களது இலக்கியப் பணிகளை உலகறியச் செய்ய முயன்றோம். எங்களது முயற்சிக்கு மூலதனம் தர முன்வந்தார் இவ்வூர்வாழ் பெருவள்ளல் ஹாஜி பி. எம். அப்துல் அஜீஸ் அவர்கள். அன்னார் இளையான்குடிப் புலவர் பாடிய நூற்களின் மறுபதிப்பிற்கு ஆகும் செலவினைப் புன்னகையோடு ஏற்றுக் கொண்டதற்கு என்ன கைமாறுண்டு நாம் கொடுக்க! நல்ல உள்ளத்தோடு அள்ளித்தந்த வள்ளலுக்கு எங்களது உள்ளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இலக்கியங்களைத் தேடும் பணி எளியதன்று, இப்பெரு முயற்சிக்கு உறுதுணை நின்று பழம்பெரும் புலவர்களின் வரலாறுகளைக் கூறி, நூல்களையும் அலைந்து தேடியெடுத்து

வழங்கி எங்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்தார் இளையான்குடி ஜனாப் அ. அ. இபுருஹிம்ஷா அவர்கள். அன்னார்க்கு எங்களது நெஞ்சு நிறைந்த நன்றி உரித்தாகுக.

இம்முயற்சியில் எங்களுக்கு நூல்கள் வழங்கி உதவிய இளையான்குடி முஸ்லிம் இளைஞர் ஐக்கியக் கழகம், நெசவு பட்டடை முஸ்லிம் அஸோசியேஷன், புதூர் விவேகாபிவிருத்தி சங்கம் ஆகிய அமைப்புகளின் நிருவாகிகளுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். இப்பணியில் செயலாற்றிய அன்பர்கள் அனைவரும் எங்களது நன்றிக்குரியவர்கள்.

இளையான்குடியில் வாழ்ந்த புலவர்களில் ஐவர் பாடல்கள் சிலவற்றையும் ஒரு கட்டுரையினையும் இப்போதைக்குப் பதித்திருக்கிறோம். அத்தனை புலவர்களின் முத்துக்களையும் வழங்க வேண்டும் என்பதே எங்களது ஆசை. இறைவன் அருளால் இப்பணியில் மேலும் தொடர்ந்து பல அரிய சேவைகளை யாற்றுவோம் என்று உறுதி கூறுகின்றோம். எங்களது முதற் காணிக்கையாக இச்சிறு நூலினைப் படைக்கிறோம். எல்லாம் வல்ல அல்லாஹ் அனைவருக்கும் நல்லருள் பாலிப்பானாக. ஆமீன், ஆமீன், யாரப்பில் ஆலமீன்.

இவண்

**பேராசிரியர் கா. மு. பாதுசா**

முதல்வர்

டாக்டர் சாகிர் உசேன் கல்லூரி

**இளையான்குடி.**

## உள்ளே


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | குத்புமணி மாலை<br>மதாறுப் புலவர் | 1-26 |
| 2. | மெஞ்ஞான மாலை<br>கச்சிப்பிள்ளையம்மாள் | 27-31 |
| 3. | மெஞ்ஞானக் குறவஞ்சி<br>கச்சிப்பிள்ளையம்மாள் | 32-33 |
| 4 | மெஞ்ஞான ஊஞ்சல்<br>கச்சிப்பிள்ளையம்மாள் | 34-35 |
| 5. | மெஞ்ஞானக்கும்மி<br>கச்சிப்பிள்ளையம்மாள் | 36-38 |
| 6 | சிங்கார வழிநடை லாவணி<br>செ. அ. சீனியாவல் ராவுத்தர் | 39-54 |
| 7. | நாகைப் பத்து<br>தென்மலைக்கான் மதுரகவி பாட்சாப் புலவர் | 55-56 |
| 8. | நாகைக் கொச்சகம்<br>தென்மலைக்கான் மதுரகவி பாட்சாப் புலவர் | 57 |
| 9. | நாகைத் திருவாசகம்<br>தென்மலைக்கான் மதுரகவி பாட்சாப் புலவர் | 58-59 |
| 10. | இரங்கூன் நாகூர் கந்தூரிப் பாட்டு<br>புதூர் போ. நா. சீனி முகம்மது பாவலர் | 60-62 |
| 11. | நெல்<br>சோதுகுடி எம். கே. எம். அப்துல்காதிறுப் புலவர் | 63-79 |
| 12. | இளையான்குடியில் வாழ்ந்த புலவர்கள்<br>அட்டவணை | 80-82 |

786

இலாஹி

# குத்புமணிமாலை

இஃது

மஹ்பூபுசுப்ஹானி, கௌதுஸ்ஸமதானி,
கிந்திலே நூருனி, அப்துல்காதிறு ஜெய்லானி

**முஹியித்தீனாண்டவர்கள் பேரில்**

இராமநாதபுரம் ஜில்லா, இளையான்குடி மாநகர்
நூறுதீன்கிளையி லுதித்த
மஹாவித்வான் ஸ்ரீமாந்

**மதாறுகவிராயரவர்களால்**

இயற்றப்பெற்று

இராமநாதபுரம் ஜில்லா,
அபிராம நத்தநகர்ப் பிரபுசிகாமணியும்,
யூனியன் சேர்மனும், டிஸ்டிரிக்டுபோர்டு மெம்பரும்
ஆகிய ஸ்ரீமாந்

**துபாஷ் து. கா. முகம்மதிபுறுஹிம்**

**சாஹிபு பஹதூரவர்கள்**

மனோதயாள தனோபகார முயற்சியால்

மதுரை வடக்குமாசி வீதி
மனோன்மணி விலாசம் அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.
1922

கடவுள் துணை.

# முன்னுரை

இக்குத்புமணிமாலையை யியற்றியோர் இராமநாதபுரம் ஜில்லா இளையான்குடியிற் பிறந்த ஸ்ரீ மதாறுப்புலவராவர். இந்நூல் செய்யது முஹம்மது என்பாருக்கு உற்ற பிணி நீங்க வேண்டுமென முஹியித்தீன் ஆண்டவரைப் பிரார்த்தித்துப் பாடியதென்பது நூலை நோக்குவார்க்குப் புலனாகும். இந் நூலாசிரியர், அருங்குணமும் பெருஞ்செல்வமும் படைத்து பந்தல்குடி ஜெமீன்தார் ஸ்ரீமாந் கான்பஹாதூர் D. K. துபாஷ் காதர் சாஹிப் அவர்களின் மருகராய் விளங்கிச் சில்லாண்டு கட்கு முன்னர்க் காலஞ்சென்ற இராவுத்த நயினாரவர்களை ஈன்ற பிதா ஆவர். இந்நூலை ஊன்றிப் படிப்போர்க்கு இந் நூலாசிரியரது பக்தி மேம்பாடு இத்தன்மையதென விளங்கும் ஒவ்வொரு பாடலும் பக்திச்சுவை மலிந்து விளங்குகிறது.

இத்தகைய நூலை நூற்றுக்கணக்கான பொருளைச் செல விட்டு அச்சுவாகனமேற்றி உலாவிவரச்செய்த பெருமை யாளரது பெருநன்றி பகதிமான்களால் ஒரு சிறிதும் மறக்கப் படுவதன்று. அந்நன்றியாளர் என்றும் பண்பு பாராட்டற் குரியர். இந்நன்றி புரிந்தோர் யாவரெனின்? லக்ஷக்கணக்கான பெருந்திரவியங்களைத் தம் தளராத் தாளாண்மையால் ஈட்டி செல்வம் பெற்றதன பயனாகிய வித்யா தர்ம நிலையங்களைத் தாம் பிறந்த பதியிலும் மதுரை மாநகரிலும் நாட்டி அழியாப் புகழை யெய்தி விளங்கியும் துரைத்தனத்தாரால் மகிழ்ந்தளிக் கப்பட்ட பல பட்ட வரிசைகளைப் பெற்றும், பிரபுசிகாமணியாய் விளங்கிய பந்தல்குடி ஜெமீன்தார் ஸ்ரீமாந் கான்பஹாதூர் D. K. துபாஷ் காதரவர்களுக்குக் கனிஷ்ட புத்திரராய்த் தோன்றிய ஸ்ரீமாந் D. K. துபாஷ் முஹம்மது இபுராஹீம் சாஹிப் பஹாதூரவர்களே இவர்கள். 'மகனறிவு தந்தையறிவு' என்றமைக்கேற்பத் தம் தந்தையாரவர்கள் குணச்செயல்களைக் கடைப்பிடித்துத் தமது தமையனாராகிய ஸ்ரீமாந் செய்யது இபுராஹீம் சாஹிப் பஹாதூரவர்களின் துணையும் ஏவலும் பெற்றுத் தந்தையார் நிறுவிய அற நிலையங்களை ஆர்வத் தோடு போற்றிப் புரந்து வருகிறார்கள்.

இப்பெருந் தகையாளர் இளமைதொட்டே கூரிய புத்தியும் சீரிய ஒழுக்கமும் பூண்டவர்களாய் விளங்கிவந்தபடியால் நூல்களைப் பிரசுரித்து உலகினர்க்கு உபகாரப்படுத்துந்துறையிலும் இறங்கியிருக்கிறார்கள். இதுபோலவே இன்னும் இவர்கள் நமது தமிழ்மொழியில் நல்லிசைப் புலவரால் இயற்றப் பட்டு வெளிவராதிருக்கும் நூல்களை ஆராய்ந்து வெளிப்படுத்த முன்வரும் தமிழறிஞர்க்குத் தக்கவாறு பொருளுதவி செய்து அவர்களை நன்கு ஊக்கித் தமிழ்ப் புலவர்களை அபிமானித்து நம் த மி ழ க த் தை மகிழ்விக்கவும், பிரபுசிகாமணியவர்கள் ஆரோகதிடகாத்திரராய்த் தம் மனைவி மக்களோடு பல்லாண்டு பல்லாண்டு இனிது வாழவும் திருவருள் பாலிக்க இறைவன் திருவடிகளைச் சிந்திக்கின்றேன். சுபம்.

இங்ஙனம்,

**ஆ. கார்மேகக் கோன்.**

★

இலாஹி

# சாற்றுக்கவிகள்

இராமநாதபுரம் ஜில்லா இளையான்குடி மாநகர்
செந்தமிழ் வித்துவ பண்டித பாஸ்கரன்
மகா-ஙா-ஙா-ஸ்ரீ ப. கா. செய்யிதப்துல்காதிறவர்கள்
இயற்றியவை.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

(1) பைஞ்சூட்டு வெள்ளெகினப் பறவையகம் வெட்கநடை
பயின்ற மோக
நஞ்சூட்டும் வேல்விழியார் நீராடு தடஞ்சூழி
ருக்கி லேபட்
டஞ்சூட்டு மரசரெனப் பகுதாகை யாண்டிளம்பி
ராயந் தன்னில்
வெஞ்சூட்டுக் கனலியடி பணிமுஹிய்யித் தீனொலியாம்
வேந்தர் மீது

(2) கனங்கிடந்த சோலைமலர் கான்றொழுகும் புதியநறை
கால்பாய்ந் தோடி
அனங்கிடந்த கழனிபுகத் தினந்தினமுஞ் சாலிவள
மதிக மேற்றுத்
தனங்கிடந்த நகரிளசை யாளுமதா றுப்புலவர்
தலைவன் பக்தி
மனங்கிடந்த ஞானசிகா மணியுரைத்தார் குத்புமணி
மாலை யென்றே

(3) கற்றவர்கள் வாய்மணக்குந் தொட்டவர்கள் கரமணக்குங்
கருதிக் காணப்
பெற்றவர்கள் விழிமணக்குங் கேட்டவர்கள் செவிமணக்கும்
பெரிதுந் தேர்ச்சி
யுற்றவர்கள் மனமணக்கு மூற்றுமிதன் பெருமைதனை
யுரைப்ப தற்கே
நற்றவர்க ளெவராலு மரிதெனில்யா மீண்டெடுத்து
நவிலற் பாற்றோ?

(4) இத்தகைய நூலுலக மெங்கணுஞ்சென் றிசைபெறுவா
னிதயத் தெண்ணிப்
பத்தியொடு நிதியுதவி யச்சிலிட்டா னபிராமப்
பதியைச் சார்ந்த
நத்தநகர்ப் பிரபுசிகா மணியெமது கண்மணிஞா
னமணி யான
உத்தமசற் குணமணிமு ஹம்மதிபு றுஹிமெழி
லோங்கு மாலே

(5) செப்பாருங் குவிமுலையார் சித்தமிசை மடலெழுதிச்
செபிக்குங் காமன்
துப்பாசுக் காதரியற் றுந்தவமோ ருருவெடுத்த
தோன்ற லானேன்
முப்பாருந் துதிபுரியு முஹம்மதிபு ருஹிமெமு
முகினேர் கையான்
இப்பாரி லனவரத மெழின்மனைவி மைந்தரொடு
மினிது வாழி.

மதுரைத் தமிழ்ச்சங்க வித்வ கழகத்து அங்கத்தினருள் ஒருவரும்
மதுரை அமெரிக்கன் காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதருமாகிய அபிராமம்
**மகா-ா-ா-ஸ்ரீ ஆ. கார்மேகக் கோனாரவர்கள் இயற்றியவை**

(1) கன்னல் கமுகி னெழில்காட்டக் கமுகு தெங்கின்
கவின்காட்டும்
நன்னர் மேய கழனிவளம் நணுகு மீளையான் குடிநகரான்
மன்ன ருவக்கக் கவியுரைக்கும் மதாறுப் புலவன்
பக்திமிகச்
சொன்ன தாகுங் குத்புமணி யாலை யாமித் தோமறுநூல்.

(2) இன்ன தாய பிரபந்த மெவருங் கற்றின் புறவேதான்
உன்னி யச்சு வாகனத்தி லுலாவ வேற்றி யுதவினனால்
பன்னு பெரியோர் பக்கல்மிகு பணிவே பூண்பான்
பாவலர்க்கு
சொன்ன மழைநன் முகிலென்னச் சொரிந்தேயவர்பாத்
தொடைபணிவோன்

(3) ஒப்பார் பாரி லெனவுலகோ ருரைப்பச் செல்வத்
தாலுயர்ந்த
துப்பாஸ் காத ரருந்தவத்தாற் றேன்று தோன்றல்
தூயோன்றுள்
எப்போ துந்தம் மகப்போதி லேற்றி யேத்து
மியல்புடையான்
செப்பு சீலஞ் செறிமுஹம்ம திபுரு ஹிமென் சீரியனே.

திருவாவடுதுறை யாதீன வித்துவானும்,
மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் சைவநூற் பரிசோதகருமாகிய
**மகா-ா-ா-ஸ்ரீ ரா. சுப்பிரமணியக் கவிராயரவர்கள் இயற்றியது**

நாயன்முனம் பஃகுலிசுவர்க் கம்புகா னென்றுரைத்த
நல்ல நீதி
யாயதைலோ பர்க்குரைக்கு முஹமதிபு ருஹீமென்
னகநட் புள்ளோன்
றூயமதா றுப் புலவன் குத்புமணி மாலைநன்கு
சொன்ன தைச்சீர்
ரேயகட லுலகினர்க்கச் சிட்டுதவி யதனாற்பே
ரெய்தி னானே.

இலாஹி

# குத்புமணி மாலை.

(1) சீர்தருஞான மணியினன் மணியாய்த்
திகழ்தருங்கிரணவெண்மணியாய்ப்
பாருலவிய தீன்தீன் குலமணியாய்ப்
பைம்பொனிற் சிறந்த கண்மணியாய்ப்
பூரணமதியிஞெளிர் தருமணியாய்ப்
பொருளினுட்பொருள் மணிக்கனியாய்
ஏருலவிய வெம்முஹிய்யிதீன் சரண
மென்றுகண்டருள் பெறுவேனே.

(2) சுந்தரமிகுந்த பொன்ன கர்க்கரசாய்த்
தூயமாமறைகளுக்கரசாய்ச்
சிந்தையுற்றவர்க்கருள் தருமரசாய்த்
திவ்யமாமொலிகளுக்கரசாய்
அந்தணர்க்குதவுபைந்தருவரசா
யாரணப்பொருளெனுமரசாய்
இந்துநன்வதனர் முஹிய்யிதீன் சரண
மென்றுகண்டருள் பெறுவேனே

(3) கொற்றவர் போற்றுஞ் சித்திரவடிவாய்க்
கோதறுங்காரண வடிவாய்
நற்றவம் பெருகுமுத்தியின் வடிவாய்
நாயகப்பொருளெனும் வடிவாய்
வெற்றிபெற்றிலங்குமானந்த வடிவாய்
மிகச்சந்திரோதய வடிவாய்
எத்திசை புகழுமுஹிய்யிதீன் சரண
மென்றுகண்டருள் பெறுவேனே.

(4) நன்றெனக்குறைஷிக் குலத்தினிலுதித்து
நாயகப் பொருளெனச் சிறந்து
குன்றுறு புயத்தினரசர்கள் புகழக்
கோவென மலர்ப்பதம் பெயர்த்துச்
சென்றிறை[1] யருஷிற்கபுசுடனேறித்
திகழ்முகம்மது நபியோர்
என்ரொளிபரவுமுஹிய்யித்தீன் சரண
மென்றுகண்டருள் பெறுவேனே.

(5) வண்டுறு கமலவாவிசூழ்மக்க
மாநகர்ப் பதியினுக்கரசாய்க்
கொண்டலங்கவிகை முகம்மது நபியின்
கோத்திரத்து தித்தசற்பாத்ரர்
அண்டர்கள் பரவுங்[2]குத் புகட்கரசர்
யவுலியாமுகிய்யித்தீன் தீனென்
றெண்டிசை புகழு முஹிய்யித்தீன் சரண
மென றுகண்டருள் பெறுவேனே.

(6) சங்கமாஞ் சகலவுயிரினுக்குயிராய்த்
தரித்திறையோனருட்டூதாய்த்
திங்களையழைத்துத்தீன் பயிர்விளைத்துச்
செகதசற்குருவெனக்கருணை
தங்கிய விறசூல் முகம்மது வழியிற்
றயாநிதியெனக் கதிரொளிவா
யெங்கணுஞ்சிறக்கு முஹிய்யித்தீன் சரண
மென்றுகண்டருள் பெறுவேனே.

(7) திருவினுந்திருவாய்க் காரணக் கடலாய்த்
திகழ்தருமாரணப் பொருளாய்க்
குருவெனக்கருணை தங்குமெய்ப் பொருளாய்
[3]ஹுதாவருள் சிறந்தலங்கார
மருவினுமருவாய்ப் பொன்னகரனைத்தும்
வாழ்த்திடக் [4]குபிரர்களெஞ்சத்
திருளறுத்துதவுமுஹிய்யித்தீன் சரண
மென்றுகண்டருள் பெறுவேனே.

---

1 அருசு-கிரீடம், ஆட்சிபீடம்

2 குத்பு-தலைவர்

3 ஹுதா-நேர்வழிகாட்டி

4 குபிரர்-இசுலாத்தை ஒதுக்கியவர்

(8) மார்க்கமாஞ் [1]ஷறகு நெறிவழுவாது
மாதவர்க்குயிரெனத் துணையாய்ப்
போர்க்கடலரியேறென வருங்குபிரர்
புன்மனத்திருள றுத்தெழிலார்
கார்க்குலக்கவிகை முகம்மதுநபியாங்
காரணக்கடவுளினருளால்
ஏர்பெறுங்குத்பு முஹிய்யிதீன் சரண
மென்றுகண்டருள் பெறுவேனே.

(9) கன்னலங்கழனி சூழ்பகுதாதிற்
காவலரெனச்சிறந்தோங்கிப்
பொன்னகரோருந்துதிக்க மண்ணவர்கள்
போற்றிடக்கீர்த்தி பெற்றழகாய்த்
துன்னிநின்றிறைஞ்சுவோர்க் கருள்புரிந்து
தூயமாவொலிகளுக்கரசாய்
இந்நிலத்துதவு முஹிய்யிதீன் சரண
மென்றுகண்டருள் பெறுவேனே.

(10) செஞ்சரணங்கள் பணிந்திடுஞ்செய்கு
முகம்மதுக் குற்ற நீர்க்கடுப்பு
வஞ்சனைபில்லி கொடும் பிணியகற்றி
வையகத்தருள் புரிந்தெனையாள்
கொஞ்சியமதுரமாமறைக் கொழுந்தாய்க்
குலவுசெங்கோனெறியரசாய்
எஞ்சலில் புகழார் முஹிய்யிதீன் சரண
மென்றுகண்டருள் பெறுவேனே.

(11) ஆரணப்பொருளாய் மூவுலகனைத்து
மடிபணிந்திடப்புவியடங்காக்
காரணக்கடலாய்க் கற்பகாடவியாய்க்
கதிரொளிபரவு மெஞ்ஞானப்
பூரணமதியாயெண்டிசை நிலவப்
புகழ்தரும் புண்ணிய வடிவாய்
[2] ஈரிலானருளார் முஹிய்யிதீன் சரண
மென்றுகண்டருள் பெறுவேனே.

---

1 ஷறகு-விளக்கம்

2 ஈரிலான்-இரண்டற்றவன்

(12) மறைபுகழ்ந்தேத்தும் வள்ளலுயகராய்
மாதவர்க்குதவு சற்குணராய்
குறைவிலாச் செல்வத்தவப்பொருள் வடிவாய்க்
கொண்டலாயண்டர் நாயகராய்
நறையுலவிய திண்புயத்து மன்னவராய்
நன்னயச்சோதியுற்றெழில்சேர்
இறையருள் பெருகு முஹிய்யிதீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

(13) வாசமைக்குழலாட் குயிரளித்துதவும்
வள்ளலாய்த் தெள்ளிய வமுதாய்த்
தேசிகவேத மெய்ப்பொருள் வடிவாய்த்
திவ்விய சாந்த சற்குணராய்த்
காசினிக்குருவாய் நபிபவுத்திரராய்க்
காரணக்கடவுளென்றிலங்கி
ஈசனல்லருள்சேர் முஹிய்யிதீன் சரண
மென்றுகண்டருள் பெறுவேனே.

(14) மாதவத்தோர் கடுதி செயப்பாலை
வனந்தனிற் புகுந்தொளி பரவ
ஆதியைத்து தித்தங்குதிர் சருகருந்தி
யானந்தக் கடலிடை மூழ்கிப்
பாதபங்கயத்தை [1] யொலிகளுக்களித்துப்
பண்புடன் மெய்யினிற் குற்ற
மேதணுகாத முஹிய்யிதீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

(15) தண்டலை சூழுமெழிற் செயிலானித்
தலத்தில் வந்தருட் கடலென்ன
அண்டர்கள் பரவத் தொண்டருக்கிரங்கி
அருள்செய்யுங் காரணக் குருவாய்
கொண்டலாய்ப் பண்டைமறைப் பொருட்டெளி
வாய்க்
குறைவறுந் தவத்துமா வழகாய்
எண்டிசைபுகழு முஹிய்யிதீன் சரண
மென்றுகண்டருள் பெறுவேனே.

---

1 ஒலிகள்-இறைநேசர்

(16) காரணக்குருவாய்க் கதி தருங்கருணைக்
கடவுளாய்ப் பரம் பொருளறிவாய்ப்
பூரணனந்த நவரசக் கனியாய்ப்
புகழ்தரு மாணிக்க முதலாய்ச்
சீருலவியமா தவமெனு மழகாய்த்
திவ்யதே சோமயக்களிறாய்
ஏர்பெறுங்குத்பு முஹிய்யிதீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

(17) அற்புதர்க்கரியதற் பராநந்த
வழிகொளிராதியினருஷிற்
கற்பவர்போற்றத்துயில் புரிந்தெழுந்து
கனகமாமணி விளக்கென்னப்
பற்பல நகரத்துயர் பகுதாதிற்
பரிவொடு மரசுறு மணியாய்
எப்புவி போற்று முஹிய்யிதீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

(18) தெருள்பரவிய பல்லுயிரனைத் தழகாய்ச்
சிறந்திடக்கோதிலா துயர்ந்த
வரமளித் தருளும் லோகநாயகராய்
வச்ரதேகராய் மணிக்குன்றாய்
யருள்பரவிய மெஞ்ஞான முச்சுடராய்
யாதியாய்ச் சோதியின் வடிவாய்
இருபதிக்கரசாம் முஹிய்யிதீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

(19) நின்றொருகாலிற் பழமறைப் பொருளை
நினைவுறப் பொருந்தி யெந்நாளும்
மன்றல் சேரொலிமார் தங்களுக்கிரங்கி
மாமலர்ப்பதம் புயத்திருத்தி
வென்றிபெற்றுலவத் திருவருள் புரிந்த
வேந்தராய்ப் பாய்ந்த முற்றெற்கே
இன்றுதொட்டருள் செய்முஹிய்யிதீன் சரண
மென்றுகண்டருள் பெறுவேனே.

(20) செம்பொனற்பாதம் பணிந்திடுஞ் செய்கு
முகம்மதுக் குற்ற நீர்க்கடுப்பு
வன்பிணிய கற்றியெழில் பெறக்கருணை
வைத்தருள் புரிந்த முத்தொளிவாய்க்
கொம்பினிற் பழுத்த கனியமுதாகக்
கோதறுஞ்சோதி மாவொளிவாய்
இன்பமுற்றெனையாள் முஹிய்யிதீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

(21) வன்னநற்சுவனப் பதியினுக் கொளிவாய்
வளாதருவாக மெய்ப்பொலிக
டுன்னிநின்றிறைஞ்சத் தவத்துறையளிக்குந்
தூயராய் நேயசற் குணராய்
நன்னயம் பெருகுநபி மருகரலி
நாயகவழிக் குருவாகி
இன்னிலந்துதிக்கு முஹிய்யிதீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

(22) பத்தியுற்றவர் கடவத்துறை பொருளாய்ப்
பரிவுறு தருண சஞ்சிவியாய்க்
கத்தனல்லருளாலத்தியை நிகர்த்த
காவலர்க் கரியெனு மரசாய்
முத்தியின் வடிவாய் மூவுலகினுக்கு
முச்சுடரொளியெனப் புவியில்
[1]எத்திம்கட்குதவு முஹிய்யிதீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

(23) களிறெனச் சிறந்த வுலகவாண்டகையாய்க்
கதிதருமதுவுரை ஞான
வழிதரும் பொருளாயொளிருதீனுக்கு
வையகத்துயிரளித் தோராய்ப்
பழமறையுணர்ந்து தவங்களைப் பெருக்கிப்
பவங்களைக் களைந்த சஞ்சிவியாய்
எழில்தரும் வேற்கை முஹிய்யிதீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

---

1 எத்திம்-அனாதை

(24) வானுலகனைத்தும் ஞானப்பாகளித்து
வளம்பெறத்தீன் பயிர்விளைத்துத்
தானரசியற்றித் தனியவன் பொருட்டாற்
றயாநிதியெனச் சிறந்தழகாய்க்
கானமர்பொழில் சூழெழில் ஜெயிலாநிக்
காவலனெப் பணிந்தோர்க
ளீனமதகற்று முஹிய்யிதீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

(25) அதிகமாம் பாலைவனந்தனிலமுத
மழைத்தருள் புரிந்து சற்கொரூபக்
கதிதருஞ் சுவனக்கரட்சியுமளிக்குங்
கமழ்தருகுங்குமப்புயத்தார்
புதுமறைப் பொருளாய் ஞானவாரிதியாய்ப்
புகழ்பெறுந்தங்க மேருருவாய்
இதயமுற்றுலவு முஹிய்யிதீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

(26) உலகினிற்ற வத்திலுயர்ந்த தோரொலியு
[1]மொலுமுறை தவறிடக்கூவற்
சலமதிற்றள்ளி வேறுருவெடுத்துச்
சார்ந்தொருதிசையினிற் புகுந்து
மலைவுறக்கருணையால் பகுதாதில்
வந்தரசியற்றி யெந்நாளும்
இலகிடவருள் செய்முஹிய்யிதீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

(27) முச்சகம்போற்று முதுமறைப் பொருளாய்
முகம்மதுநபி திருக்கருணைப்
பட்சம் வைத்தீன் றபாத்திமத்தினிய
பாலகர்அசன் வழியொளிவாய்.
மெய்ச்சொரூபம தாயருட்டயா பரராய்
மேதினியுதித்த வெல்லோர்க்கு
மிச்சையாங்குத்பு முஹிய்யிதீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

---

1 ஒலு-ஜலத்தாலுடம்பைச் சுத்திசெய்தல்

(28) பாட்டினுக்கடங்காப் புகழ் ஜெய்லானிப்
பார்த்திபர்க்கிறை கதிருலவு
கோட்டுவாரணத்தார் பரவிடச் சான்றோர்
குழுவொடு சூழ்ந்தகங்களித்துத்
தேட்டமுற்றொளிருங் கலையணிந்தழாய்ச்
செகதலத்து தித்த சற்குருவாய்
ஏட்டலர்மாலை முஹிய்யிதீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

(29) கலையுணர்ந்துலவு ஞான தேசிகராய்க்
[1]காபிலாக் குழுவொடும் சிறந்த
மலைவனங்கடந்து நடத்திடக் கள்ளர்
வழிமறித்திடவருள் புரிந்து
குலவியதீனுக் கழைத்தவர் மகிழக்
கோனெறியொடும் பகுதாதி
னிலகிய குருவா முஹிய்யிதீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

(30) சென்னியிற் பாதந்தரித்திடும் செய்கு
முகம்மதுக் குற்ற நீர்க்கடுப்புத்
தன்னையுமகற்றிச் செல்வ முண்டாகத்
தயவுசெய் தருளுமுத் தொளிவாய்
மன்னர் மன்னவர்கடொழும்பதக் குருசையாய்
வள்ளலாயெங்களுயகராய்
என்னிதயம்மார் முஹிய்யிதீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

(31) அன்னைதன்வயிற்றிற்றரித்திருள் பொருந்து
மம்புயலெனப் பெரும்பூதச்
[2]சின்னையுமழித்துப் பெரும்புகழ் பரவச்
சின்மயானந்த சந்திரன் போற்
கொன்னுனை வடிவேலரசர்கள் போற்றக்
குவலயத்து தித்தன்பு வேண்டும்
என்னையாண்டருளு முஹிய்யிதீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

---

1 காபிலா-தலைமை, வர்த்தக யாத்ரீகர்

2 சின்-பூதம்

(32) தாய்வயிற்றுளிர் [1]கிலுறு [2]பய காம்பர்
தனித்திறையோனருட் பொருட்டால்
தேய்வில் சற்குணராய் வந்தகம் புகுதச்
சிறப்பொடு மானந்தப் பொருளை
யாய்ந்துணர்ந்தழகாய்க் குத்புகட்கருளு
மண்ணலாயென்னை யாண்டன்பை
யீந்தருள் புரியு முஹியித்தீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே

(33) சொற்கடங்காது புகழ் ஜெயிலானித்
தொன்னகர்க்கிறையெனத் திகழ
மிக்கவேயுதித்தும் பானுவின் கதிரும்
விளங்கிடத் தலங்களுமொளிரச்
சிக்கெனவழைத்துக் கைத்தாயுங் கண்டுலவச்
செஞ்சரண் பணிந்திடவருளு
மிக்குமாமறை முஹியித்தீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

(34) செம்பொனிற் சிறந்த பொன்னக ரோருஞ்
சேவடிதனைத்துதித்தேத்த
வம்புவி[3] ற முலான் முதலிரவதனி
லாண்டகையெனவுதித்தழகாய்ப்
பைம்பொனின் வடிவார் பாலமுதூட்டப்
பத்தியுற்றமு தருந்தாமல்
இன்பநோன்பிருந்த முஹியித்தீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

(35) சுந்தர தீபமா மதிவிளக்காய்த்
தூயசந்த்ரீகமாம் விளக்காய்ப்
பைந்தரு விளக்காய் ஞான மாமறையின்
பண்புறை சோதிமா விளக்காய்
கொந்துல வியதீன் மாமணி விளக்காய்க்
கோதறுங் காரண விளக்காய்
எந்தனையாளு முஹியித்தீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

---

1 கிலுறு-ஒரு தீர்க்கதரிசி

2 பயகாம்பர்-இறைத்தூதர்

3 ரமுலான்-ஓர் அரபி மாதம்

(36) மதியொளிர் கருஞ்சுரக் கடவுளராய்
வாய்த்த நன்மணிப் பொருள் வடிவாய்
கதிதருஞ் சுவனநாட்டினிற் கரசாய்க்
காந்தியுற்றெழில் பெறுமரசாய்த்
துதிகொள்முத்தொளிவாயிறையவனருஷிற்
றுயின்றெழும்பைந் தருவாயென்
னிதயத்திற் பொருந்து முஹிய்யிதீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

(37) அற்புதவேந்தாய்த் தவத்தரும் பொருளா
யறிவழிமுறை தவருது
பற்பலவித மாங்காரணத்தோடு
பாத பங்கயத்தினைப் போற்றும்
விற்பனர்க்கருள் ஞானமுங் கொடுத்தருளும்
வேந்தராய்ச் சாந்தக மணியாய்
இப்புவிக் குருவாம் முஹிய்யிதீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

(38) நன்றிசேர் மறைகளைத்து நாயகராய்
நரர்செயுந் தீவினை யகற்றி
வென்றி சேரகத்தினுலவியே சிறந்து
வேந்தராய்ப் பாந்தமுற்றே தீன்
மன்றுளோர்க்குதவிக்குபிறறுத்தோங்கி
மாதவச் சோதி மாருதார்
என்றெளி பரவு முஹிய்யிதீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

(39) வண்ணமாந் தவத்துக்குரிய மாதவராய்
வானுலாவிய சுடர் மணியாய்ப்
புண்ணியபதியாய் நவத்துறுமியோகப்
புனிதராய்ப் பவத்துறையணுகுந்
திண்ணியவிருளின்தீ வினையகற்றிச்
செயம்பெறும் பொருடனைத் தெரிந்தே
எண்ணருங்களிகொள் முஹிய்யிதீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

(40) செங்கமலத்தால் பணிந்திடுஞ் செய்கு
முகம்மதுக் குற்ற நீர்க்கடுப்பு
பங்கநோயகன்றே யெழில்பெறக் கடைக்கண்
பார்த்தருள் புரியுமென் கோவாய்
சிங்கராய்த்துங்கத் தயாபர நிதியாய்ச்
செல்வராய்க் கல்வி மாதவரா
யெங்களுயகரா முஹியியிதீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

(41) வாரிதி சூழ்ந்த புவியிடத்திருளை
மாற்றியற் புதக்கதிர் சிறந்த
காரணச்சுவனப் பதியினிற் சேர்த்துக்
கனங்குடையிடப் படியுலவுந்
தீரநன்னபியின் பேரரென்றுளிருஞ்
செம்மலாய்த் தீவினையகற்றி
யேருலவிடச்செய் முஹியியிதீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

(42) படிபுகழ்சோதி மயமெனத் தோன்று
பார்த்திபர்க்கிறைவராய்க் குருவாய்
விடுகதிரெரிக்குஞ் சுவன நாயகராய்
விண்ணுலகினுக்கும் ரெட்சகராய்க்
கடிமலர்ப் புயத்துக் கடவுளாயெதிர்த்த
காவலருளம் பதைபதைக்க
இடியெனத்தரவு முஹியியிதீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

(43) வரமுறப்புலன்களைந்தையு மவித்து
மார்க்க நன்னெறியினுக் கழகாய்ப்
பரம்பொருளென வந்துதித்த வாசகராய்
பாயொளிவச்ர தேசிகராய்
விரையுலவிய திண்புயத்து நாயகராய்
வேத நுண்பொருளறிந்தவரா
யிருபதிக்கரசாம் முஹியியிதீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

(44) வடிவுறுகோடி சந்த்ரப் பிரகாச
மாதவப் புதிய வேதியராய்ப்
படிவுறு பாவத்திருளறுத் துலவப்
பாய்கதிரெரிக் குஞ்செஞ் சுடராய்
அடல்செறி குபிரர்கண்டுளந் திடுக்கிட்
டஞ்சிடத் தஞ்சமென்றோர்க்கு
மிடரறுத்துலவு முஹியியிதீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

(45) சறகினைத் தவறாதவர்களுக்குயிராய்
தயாபரசுவன ரட்சகராய்
மறைபுகழ்ந்தேத்து மாதவர்க்குரிய
மாமணி ஞான ரெத்தினமா
யறிவெனுங் கடலாயாதியின் பொருளா
யாண்டகையெனக் கதிருலவு
மிறைவனல்லருள்சேர் முஹியியிதீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

(46) கனிந்தொழுகியதேன் பழமறைக் கொழுந்தே
காவகத்தேடரும் பொருளே
யனந்தகோடிய பல்லுயிர்களும் வணங்க
வாதியின் கருணை பெற்றோரே
கனம்படிந்துலவு சோலைசூழ் மக்கப்
பதிநபிக்குரிய காவலரே
எனத்துதித்தேத்து முஹியியிதீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

(47) அலைகடல் சூழ்ந்து புவியினில்தீமை
யகற்றிய கொண்டலாயமரர்
கலகலென்றிறைஞ்சிப் போற்றிய சுடராய்க்
காமதேனுய்ப் பஞ்ச தருவாய்
நலங்கிளர் ஞானத்தயாளவேதியராய்
நாயகமாய் நல்லவமுதாய்
இலகியகிரண முஹியியிதீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

(48) முப்பொருளாக்கிக் கதிரொளி பரப்பு
மூவுலகினுக்கு முச்சுடராய்
மெய்ப்பொருளாகிப் பேரின்பக் கடற்குள்
மேவிய ஞானவுல்லாசத்
தற்பரானந்த சதாசிவப் பொருளாய்
தயாநிதியாய்ப் பெரும் பொருளா
யெப்புவி போற்று முஹியியிதீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

(49) பேரொளிவாகி விளங்கு முச்சுடராய்ப்
பெருகியே பேரின்பக் கடலாய்த்
தாரணிந் துலவு திண் புயக் கிரியாய்ச்
சகத சற்குரு மதக்களிறுய்ப்
பாருலவியதீன் பயிர்ச்செழுங்கொழுந்தாய்ப்
பரம்ஞானிக் குருவேந்தா
[1] யீரிலானருள் சேர் முஹியியிதீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே

(50) பார்த்திபர்க் கிறையாத்தமது பாதத்தைப்
பணிசெய்கு முகம்மதுக்குதவி
காத்தருளொடுநீர்க் கடுப்புநோய் முதலாய்க்
கண்டபல பிணிகளும் நீங்கப்
பூர்த்தியதாகக் கருணை செய்தருளும்
பொன்னகரோரு மற்றெவரும்
ஏத்தியே போற்று முஹியியிதீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

(51) செங்கதிர் பரப்பும் பானுவாயிலங்குந்
தேசிகானந்த செஞ்சுடராய்ப்
பங்கயமணியாய் ஞான சாகரமாய்ப்
பத்தியுற்றருந்து புத்தமுதாய்ச்
சங்கையுற் றுலவுதோன்றலாய்ச்சிறந்த
சற்குணமெய்த்தருவாகி
யிங்கிதமுலவு முஹியியிதீன் சரண
மென்றுகண்டருள் பெறுவேனே.

---

1 ஈரிலான்-இரண்டற்றவன் (ஏகன்)

(52) சொல்லரும் பொருளாய் எண்ணுதற்கரிய
சோதியாய் நீதி மாதவராய்க்
கல்வியுட் பொருளையறிந்துணர்ந்தோர்க்குக்
கருத்தினுட் பொதிந்த நன்மணியாய்ச்
செல்வமாமமுத ஞானவாருதியாய்த்
தெரிகிலாப் புலவர்களெஞ்சத்

தெல்லறுத் துதவு முஹிய்யிதீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

(53) தம்பமென்றோர்கட்கரிய பேரின்பச்
சாகரமாகியெண்டிசைக்கும்
பைம்பொனூர் மேருவொளிர் சிகாமணியாய்
பண்ணருஞ் சொக்கமாநிதியாய்
வன்பிணிக் கலியுமென்னை விட்டகல
மனதருள்புரியு நாயகராய்
இன்பமார் ஞான முஹிய்யிதீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

(54) சொர்னமாவரையாய் நான்மறைக் கொழுந்தாய்ச்
சோதியாய் மாதவநிதியாய்
மன்னிய தவத்தினோரகத்துறைந்த
வச்ரமாமணிச் சுடரொளியாய்க்
கன்னலங்கழனி சூழ் பகுதாதிற்
காவலர்க் கரியென வந்த
விந்நிலக்குத்பு முஹிய்யிதீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

(55) சிறந்திடுஞ்சசியும் பதங்கனுமுடுவுந்
தீபமுந்நிகரிலாவொளிவர
யறம்பெரும் பொருளுமகத்தி னுட்டெரிந்த
வளவிலாக்காரணத்துருவாய்த்
துறந்தவர்க்கரிய தவந்தரும் பொருளாய்த்
தோன்றலாய்த் தொடருமைம்புலன்கள்
இறந்தவர்க்குதவு முஹிய்யிதீன் சரண
மென்றுக்கண்டருள் பெறுவேனே.

(56) அரியவானவர்கள் பரவிய கமல
வடியினைத்தொழு முதியோர்க்குப்
பரிதியொத் தொளிருந்தீப மூச்சுடராய்ப்
பாவலர்க்குதவு பைந்தருவாய்க்
கருணைபூத்திலகு மிருகண்மணி ஞெளிவாய்க்
காசினிக்குரிய காட்சியரா
யெரிகதிர்த்தரள முஹியித்தீன் சரண
மென்றுகண்டருள் பெறுவேனே.

(57) தீதறுமடியா ரிருளறுத் துதவிச்
சிந்தையிற்றெளிவுறப் பொருளைக்
காதலுற்றுணர்ந்து மாதியின் கருணைக்
கடற்படிந்துலவிட வருள்செய்
வேதபோதகரா யெளியவர்க்குதவு
வேந்தராய் ஞானவாருதியை
யீதெனக்காட்டு முஹியித்தீன் சரண
மென்றுகண்டருள் பெறுவேனே.

(58) மறையமுதொழுகிப் பெருக்கெடுத்தோடி
வாருதியெனத் திகழ்ஞானத்
துறைபடிந்துலவு மொலிகளுயைக ராய்த்
தூயமாதவத்துறும் பொருளாய்த்
தறையும்வானும் பொன்னகரமும் போற்றுஞ்
சற்குணதயா நிதிக்குருசாய்
இறையருள்பொருந்து முஹியித்தீன் சரண
மென்றுகண்டருள் பெறுவேனே.

(59) தந்தைதாயெனவும் பல்லுயிர்க் குயிராய்த்
தாரணியுதித்த சற்குருவாய்க்
கொந்துலவிய தீன்பயிர்க்குறு மழையாய்க்
கோதிலாச்சுவன நாட்டரசாய்ச்
சுந்தரமுலவு மகிலவற் புதராய்ச்
சுடர்மணித்தீபப் பொற்குன்று
யெந்தனையாளு முஹியித்தீன் சரண
மென்றுகண்டருள் பெறுவேனே.

(60) மன்னியதவத்துக்குரிய மாதேவாய்
வள்ளலாய்த் தெள்ளியபாதந்
தன்னையும்வணங்குந் தீரஞெஞ் சைய்த
முஹம்மதுதாரணியுலவி
நன்னயம் பெருகிப்பிணி யகன்ரேடி
நலம்பெறக் கருணைசெய்துதவி
யென்னையாண்டருளு முஹிய்யிதீன் சரண
மென்றுகண்டருள் பெறுவேனே.

(61) மங்குலக்கவிகை முகம்மது நபியின்
மார்க்கமுந் தீர்க்கமதாகக்
கங்குலைவிலக்கித் தீன்பயிர் விளைத்துக்
காரணமுலவு சின்மயமாய்ப்
பொங்கியவருட் குணைசற் சனராய்ப்
புனிதராய்க்கனிந்த முப்பழமாய்
எங்கனுயகரா முஹிய்யித்தின் சரண
மென்றுகண்டருள் பெறுவேனே.

(62) உலவுசந்திரனாய்த் தவத்துறை வேந்தா
யுரியமாதவப் பொருளறிவாய்ச்
சிலையணிபுயத்து மருவலர்க்கரிய
சிங்கராயெங்கனுயகராய்ப்
பலனருள் ஞானசிகாமணி யொளிவாய்ப்
பைந்தமிழ்க்கைந்தருவடிவா
யிலகியகருணை முஹிய்யித்தீன் சரண
மென்றுகண்டருள் பெறுவேனே.

(63) ஆயனுக்குதவிச் சுவனநாடாள
வருள்செய்யுந் தருணமாமுகிலாய்த்
தாயகக்கொழுந்தாய் மும்மதக் களிருய்த்
தற்பரானந்த சற்சொருப
மாயமாயெங்கு மொளிர்சதானந்த
வள்ளலாயெந்தனுக்கிரங்கி
யீயுநற்கருணை முஹிய்யிதீன் சரண
மென்றுகண்டருள் பெறுவேனே.

(64) அரியமெய்ப்பொருளாய்க் காஞ்ஞுக்காக்ஷி
யண்ணலாய்த்துங்கமாமேராய்
தூரியசந்த்ரீகவெழில் தருங்குன்ருய்த்
தூயசற்பன்ன சன்மார்க்கம்
பெருகியவுள்ளத் திருமறைவடிவாய்ப்
பெட்புறுங்காரணக்குருசாய்
இரவியாமெங்கள் முஹியித்தீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

(65) கடலினிற் கவிழ்ந்த கப்பலையழைத்துக்
காரிகைமணமுடித்தழகா
யுடலினுக்குயிரா மிறையருட் பொருட்டா
லுலகினுக்கருள் தயாபரராத்
திடபுயாச யிளவரசர்கள் புகழத்
தீனெறியுலவிடக்குபிர
ரிடரறுத்துததவு முஹியித்தீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

(66) பங்கயவாவித்தடங்கள் சூழ்மக்கப்
பதியினுக்கதிபதி யெனவுந்
துங்கமாம், பதுறிலபுஜகில் படையைத்
தூள்பட, வொருகை, மண்ணுதவிக்
கொங்குலவிய தோளரசர்கள் போற்றிக்
குலவிடச்செயுநபிபேரர்
இங்கிதவடிவார் முஹியித்தீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

(67) வங்கமாவேறு தங்கமதாக
வரிசையுற்றழகு மகிழ்ந்து
பங்கமாம் பிள்ளையுண்ட சந்யாசி
பருவயிற்றினைக் கிழித்தழைத்த
புங்கமாங்கிரிமேற்றீப ரெட்சகராய்ப்
புகழ்தருஞானமாமணியா
யெங்கணுமுலவு முஹியித்தீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

(68) மேற்பறந்துலவு பக்ஷியின்சிரசும்
வெடித்திடவொலுவிலா நினைத்துப்
பார்ப்பவன்சிரசும் வெடித்திடப்புவியிற்
பாங்கொடுசெய் தவப்பொருளாய்க்
காப்பவரெவர்க்குங் கருணையங் கடலாய்க்
காத்திமுலன்பியாவரசா
யேற்பவர்க்குதவு முஹியித்தீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே

(69) முப்பொருளாகிக் கதிர்மணி யொளிவாய்
மூவுலகினுக்கு மற்புதராய்க்
கற்பவர்க்கரசாய் நினைத்திடுவோர்க்குக்
கதிதரும் பரம்பொருள்வடிவாய்ச்
செப்புதற்கரிய லோகநாயகராய்த்
தீனவர்க்குரிய கண்மணியா
யெப்புவிபுகழு முஹியித்தீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

(70) கந்தமுமிகுந்த செங்கமலத்தாள்
கருதிமெய்ப்புற வணங்கிடவே
சுந்தரன் செய்குமுகம்மது மெய்யிற்
றுடர்பிணியகற்றி யெந்நாளும்
சிந்தையின் மகிழ்ந்து வாழ்வுறக்கருணை
செய்தருள் புரியுமெங்கோவா
யெந்தையாமெனையாள் முஹியித்தீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

(71) வாரிதி, சூழ்ந்த புவியினுக்கரிய
வாரணத்தலைவர்கள் போற்றக்
காரிகைஈன்ற சுதனுயிர்வாங்கிக்
ககனுறுங்கூற்றுவன் மயங்கிப்
பேருலவிடப் பின்னுயிர் விடுத்தருளப்
பேசியங்கழைத்த மெய்ப்பொருளாய்
ஏர்பெறுங்கீர்த்தி முஹியித்தீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

(72) தொழுகையிலொரு ஜின்பணி யுருவெடுத்துச்
சுஜூதுசெய்திடுந் தலத்துற்றுப்[1]
பளபளென் றொளிரப் படம்விரித்துலவப்
பங்கயக்கரமதிற்றள்ளி
யளவுலாவுவகை பொங்கி யானந்த
வாதியின் கடன்முடித்தெழுந்தே
எழில்பெறுங்குத்பு முஹியித்தீன் சரண
மென்றுகண்டருள் பெறுவேனே.

(73) செம்பொனிற்கிரியின் தீபமென்றெங்குந்
திகழ்தரும் புகழ்மகுமூது
அம்புவிகளெழிலாமருள் சுதைவழியி
லசன்வழியுதித்த கற்பகமாய்
தம்பமென்றோர் கடுன்பத்தை யகற்றுந்
தருதயாநிதி வடிவேந்தா
யின்பசற்குணரா முஹியித்தீன் சரண
மென்றுகண்டருள் பெறுவேனே.

(74) துய்யநற்கலையு நெய்தவனுரைக்கிற்
றேன்றலுமவன் பதாதிகளும்
செய்யகிண்ணத்தி னமுங்கிட வெழுப்பித்
தீன்பயிர்விளைத்த வென்கோவாய்
மெய்யுறவணங்கும் புலவனுக்கிரங்கி
வெப்புறுங்கலியகன்றோட
வெய்யுநற்கருணை முஹியித்தீன் சரண
மென்றுகண்டருள் பெறுவேனே.

(75) மன்னவர்புகழுந் தங்கமேருவென்
மாநிலத்துதித்த சற்குணராய்த்
தன்னையுமறிந்தோரகம் புகுந்தழகின்
சசியொளிர்கிரண மாதவராய்ப்
யன்னருஞ் சீர்பெற்றிலங்கிடக் கலிமாப்
பயிர்விளைத் தோங்கிடவருளு
மென்னிருகண்ணின் முஹியித்தீன் சரண
மென்றுகண்டருள் பெறுவேனே.

---

1 சுஜூது-சிரம் தாழ்த்தி வணங்குதல்,
நெற்றியைத் தரையில்வைத்து வணங்குதல்

(76). ஆதியாயெங்கு மொளிர்சதானந்த
வண்ணலாய் நன்னயக்குருவாய்
காதலுற்றோர்க்கு நெறிமுறை யுரைத்துக்
காட்டி நற்பதவிபெற்றுலவ
நீதியாயெங்குங்கோ னெறிநடத்து
நிஷ்களானந்த மெய்வடிவா
யேதிலானருள்சேர் முஹியித்தீன் சரண
மென்றுகண்டருள் பெறுவேனே.

(77) சோரனுக்கருளா லொலித்தனம் பெருகித்
தூயநன்மார்க்க முண்டாகத்
தீரமுற்றுலவு ராஜர்கள் பணிந்து
சேவடிதனைத் துதித்தேற்றப்
பாருலகெங்குமொளிர் ஜெயிலானிப்
பதிவளர்கனகரெத்தினமா
யேர்பரவியநன் முஹியித்தீன் சரண
மென்றுகண்டருள் பெறுவேனே.

(78) தருமநன்மணியாய்ப் பெருகுரெத்தினமாய்
ஷறகுயிர்க்குயிரெனும் பொருளாய்
வரைபுயக்கருணை வள்ளலாய்க்கனக
வானவர்போற்றும் விற்பனராய்
மருமலர்ப் பொழில்கள்சூல் பகுதாதில்
வாழ்ந்தரசியற்றிய வேந்தா
யிருபதிக்குரிய முஹியித்தீன் சரண
மென்றுகண்டருள் பெறுவேனே.

(79) வாசநற். பொழில்சூழ். மக்கமா. நகர்க்கு
வந்தரசியற்றி யெல்லோர்க்கு
மாசணுகாது பொற்கதியளிக்கும்
வள்ளலன்னபியருட் பொருட்டாற்
காசினியுதித்தே யொளிர்தரு வேந்தராய்க்
காரணத்தருமையென் குருவா
யீசனல்லருள்சேர் முஹியித்தீன் சரண
மென்றுகண்டருள் பெறுவேனே.

(80) தென்றிரைசூழ்ந்த பூவினிற்கமலச்
சேவடிதனைத்துதித்தேற்று
மன்றலான்செய்கு முஹம்மதுக்கிந்த
வன்பிணியகற்றிமேலாகி
நன்றெனச்சிறந்த வாழ்வுமுண்டாகி
நற்கதிபெறவருளுதவி
இன்றருள்புரியு முஹிய்யிதீன் சரண
மென்றுகண்டருள் பெறுவேனே.

(81) முச்சுடர்வடிவாய்க் கருணையங்கடலாய்
மூதறிவோர்களுக்கரசாய்ச்
சச்சிதானந்தக் கடவுளின் பொருளைத்
தனித்தகங்களித்து மெய்வணங்கி
யுச்சிதவொலிமார்தம் புயத்தழுந்த
வொளிர்பதமளித்தொளிபரவ
விச்சகத்தருள்செய் முஹிய்யிதீன் சரண
மென்றுகண்டருள் பெறுவேனே.

(82) அகமியப்பொருளாய் வியப்புறுஞ்சான்றோர்க்
கரியவேதியர் கண்மாதவராய்
புகழ்பெறவெனது விருட்கலியகற்றிப்
புந்தியின்மகிழ்வுறவினையைச்
சகமதிலணுகாச் சுகமருள்தீபச்
சசிமுகமன்னர் மன்னவர்க்கு
மிகபரத்துதவு முஹிய்யிதீன் சரண
மென்றுகண்டருள் பெறுவேனே.

(83) வரத்துயர்மாதவப் பெரும்பொருளாய்
மாநிலத்துதித்த செங்கதிராய்
கருத்தினுட்பொதிந்த வேதமூதறிவாய்க்
கவினருட்கடலமுதருந்திப்
பரிவுறு சுவனநாட்டினுக்குரிய
பைம்பொனுயெனைத்துடர்கலியி
னிருடனைத்துணிக்கு முஹிய்யிதீன் சரண
மென்றுகண்டருள் பெறுவேனே.

(84) செங்கதிர்க் காந்திமணிப்பணி சுமந்த
செகதலத்துறைந்து பன்னூல்கள்
சங்கையுற்றுணர்ந்தே யிங்கிதமாகத்
தனித்தனிமகிழ்ந்து கற்ருலும்
புங்கமாமிறைவனருள் பெருதவர்கள்
பொன்னுலகடைவரோபாரி
லெங்களுக்கருள்செய் முஹியித்தீன் சரண
மென்றுகண்டருள் பெறுவேனே.

(85) அன்புமெஞ்ஞானக் குமரியைப்படிந்த
வண்ணலாய்க்கு வலிதுகுலத்துப்
பைம்பொன்மேனியின் கதிஜாதவத்துருவாய்ப்
பருவதமுடியிடு சுடராய்த்
துன்பநோயகற்றுஞ் சஞ்சிவித்துரையாய்ச்
சோதியாய்ப் புதியநல்லமுதா
யின்பமுற்றருள்செய் முஹியித்தீன் சரண
மென்றுகண்டருள் பெறுவேனே.

(86) தீன்வழிக்குரிய கோன்முறை நடத்தி
தேடொணுக் காக்ஷியுற்றழகாம்
நான்மறைக் கொழுந்தாய் நாயகப்பொருளாய்
நற்றவர்க்குயிர்ப் பெருந்துணையாய்க்
கான்மரப்பொழிலுஞ்சூழ் ஜெயிலானிக்
காவலரெனுங்கடவுளரா
யீனமதகற்று முஹியித்தீன் சரண
மென்றுகண்டருள் பெறுவேனே.

(87) தொண்டருக்குரிய நாயகப் பொருளாய்த்
தொழுந்துறைக் கதிர்விடுஞ் சுடராய்ப்
பண்டை நாட்டொடுத்த பழவினையகற்றும்
பாதபங்கயக் குருவரசாய்
மண்டலத்துரிய ஞான தேசிகராய்
வாய்த்திடுந் தூயசொற் கடங்கா
வெண்டிசை துதிக்கு முஹியித்தீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

(88) பண்மறையொலி கண்மிகு பகுதாதிற்
பாங்கொடு தீங்கணுகாது
விண் புகழபுசாலிகு மகிழ்ந்தீன்ற
வேந்தராய்ச் சாந்தக முதலாய்த்
திண்புயவொலி மார்க்கருள் வசீகராய்த்
தீனவர் குருசிகா மணியா
றெண்ணருஞ் சீர்சால் முஹிய்யிதீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

(89) மனந்தனிற் சிறந்த தாமரைத்தாளை
வணங்கியற் புதமெனப் பணியுங்
கனந்தரு செய்கு முகம்மதுக்கிந்தக்
கடும்பிணியகற்றி மென்மேலுந்
தினந்தினம் வாழ்வும் பவுசுமுண்டாகச்
செய்தருள் புரியு மெங்கோவா
யெனக்கருள் புரியு முஹிய்யிதீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

(90) கோவெனச் சிறந்த வொலிகளுக்கரசாய்க்
கோதணுகாப்பரம் பொருளாய்ப்
பூவினுக்கரிய பதிபகுதாதிற்
புரந்தரசியற்றிய தேவாய்
பாவுரைத்துலவுமடியனுக்கிரங்கிப்
பைந்தருவென வருள்முகிலா
யேவலுக்கருள்செய் முஹிய்யிதீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

(91) திடபு பாசபிலவொன்னலர் போற்றுஞ்
சேவடிதணைத்துதிந் தேத்தாப்
படிபுகழாசைப் புல்லன் யான் செய்யும்
பவங்களைச் சிதறி நல்வழியில்
வடியனுக்குதவியனுக் கிரகஞ்செய்
யண்ணலாய்ச் சுத்த நிர்மலரா
யுடுகதிரெரிக்கு முஹிய்யிதீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே

(92) திருடனுக்குதவி யொலித்தனம் பெருகச்
செய்த மாதவத்தரும் பொருளாய்
விரைதரும் புயத்து மருவலர்க்கரியாய்
வேந்தராய்ச் செய்கு மார்க்கரசா
யருளறக் கலியினிருட் கடல்படியு
மடியனுக்கிரங்கி ரெட்சித்தே
யிருபதிக்குதவ முஹிய்யிதீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

(93) கல்வியங் கடலாய்ச் சொர்ன மாகிரியாய்க்
காவுலகத்தில் மென்மேலுஞ்
செல்வமதாகவுறைந் தருள் சோதி
சின்மயானந்த மெய்யொளிவாய்
நல்விதத்தெவருஞ் சொல்லரும் பொருளாய்
நாதராய்க் காதலுற்றெந்தன்
இல்லகத்துறையு முஹிய்யிதீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

(94) சொல்லிய ஞானத்தெளிவெனும் பொருளாய்த்
தூயமாகற்பகத் தருவாய்
வல்லவன் றூதர் முகம்மதுநபியெம்
மாதவருதித்த மக்காவில்
நல்லியல் பாகவனேக நாட்டவமு
நாடியங்கொரு பத நிறுத்தி
யெல்லெனத் தவஞ்செய் முஹிய்யிதீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

(95) கொந்துலவிய தீன் பயிர்க்குறு மழையாய்க்
கோதறு மறையொளி வடிவாய்க்
கந்தரமுலவு சோலைகள் சூழ்மக்
காவினிற் சிறந்தொளிவாக
வந்துதித்தழகாய் முகம்மது நபியின்
வழியினிற் களிறெனவதிந்தே
யிந்தெனவொளிரு முஹிய்யிதீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

(96) தேயமுற்றவர் கண்டடி பணிந்தேத்தச்
செல்வமாங் கல்வியா போற்றத்
தாயெனவுதவிக்கலிய கன்ருேடத்
தயவுசெய்தருளு மெங்கோவாய்
தூயமாங்கருணைக் கடலகத்தமுதாய்த்
தொண்டருக்கிரங்கி யெந்நாளும்
மீயுநற்குருவா முஹிய்யிதீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

(97) குதுபுகட்கரசாய் நான் மறைக்கொழுந்தாய்க்
கோதறவெழுந்தநன் மதியாய்
மதியினுக்கரிய ஞான வாரிதியாய்
மாந்தருக்கருள் சிந்தாமணியாய்
அதிபதி தீனுக்கரசர்கள் தொழுநல்
லம்புய பாதசந்திரன் போல்
இதமரசியற்று முஹிய்யிதீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

(98) பூரண ஞான நேர்வழியகத்திற்
பொதிந்தருள் புரிந்த முச்சுடராய்ப்
பாரினிற் சிறந்த பாத பங்கயத்தைப்
பற்றிய சீடன் யானேழை
மார்பினிற்றூளைத் தரித்தக மகிழ்ந்து
மாதவத்துறு மதாறுக்கு
ஏர்பெறவருள் செய்முஹிய்யிதீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

(99) கந்தமுமிகுந்த செங்கமலத்தாள்
காதலுற்றிட மிக வணங்கு
சிந்தையன் செய்கு முஹம்மதுக் குற்ற
தீவினையகற்றி யெந்நாளு
மைந்தரோடுலவிச் செல்வமுண்டாகி
வாழ்ந்திடக் கிருபை செய்துதவி
யெந்தனுக்கருள் செய்முஹிய்யிதீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

(100) ஆதியே வாழி சோதியிலுதித்த
அகமது நபியருள் வாழி
மாதவம் வாழியுலகப் பல்லுயிரும்
வாழ்ந்திடக் கதிரொளி பரவ
காதலாங் குத்புமணியின்னமாலை
கற்றவர் கேட்டவர் வாழி
யேதிலான் மகிழு முஹியித்தீன் சரண
மென்று கண்டருள் பெறுவேனே.

**சம்பூரணம்.**

இலாஹி

# மெஞ்ஞானமாலை

இஃது

இராமநாதபுரம் ஜில்லா இளையான்குடி

லுக்குமான் ராவுத்தரவர்களின் புத்திரியும்

திருப்பரங்குன்றம் மலைமேலடங்கிய

சிக்கந்தரொலியவர்களின் பக்தர்

ஸ்ரீமத் முகம்மதுமீருன் மஸ்தான் சாஹிபு

அவர்களின் சகோதரியும்

மெஞ்ஞான சொரூபியுமாகிய

ஸ்ரீமதி

## கச்சிப்பிள்ளையம்மாள்

பாடியது.

சிவகெங்கை

ஸ்ரீ கலா பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.

1918

இதன் விலை அணா 2

இராமநாதபுரம் ஜில்லா இளையான்குடி நகர்

## செ. அ. சீனியாவல்ராவுத்தர்

*அவர்களியற்றியன*

### அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்

மயிலகவுந்துடவை செறியிளசைநகர் தனிலுக்கு
மானுதாரன்
பயிலரிய தவத்துதித்த நங்கைக்கச்சிப் பிள்ளையம்மாள்
பாடல்மாயைத்
துயிலகல மெஞ்ஞான முறைபுகட்டி வேதாந்தச்
சோதிகாட்டக்
கயிலுலவும் நவநீதமாகுமெனப் புலவரெலாங்
கழறினரே

இராமநாதபுரம் ஜில்லா இளையான்குடி நகர் இயற்றமிழ் வித்வான்

## ப. கா. பண்டிதம் செய்யிதப்துல் காதிறவர்கள்

*அவர்களியற்றியன*

### அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்

கத்தனருள் மலியிளசை நகரமதிலுக்குமான்
ஹக்கீமீன்ற
புத்திரியென்றுல குதித்துப் பரங்கிரியில் வளரொலியைப்
போற்றும் பக்தர்
அத்துவிதமுகம்மது மீருன்மஸ்தான் சாஹிபுசோ
தரியாய் நாளும்
சித்தமொரு வழிப்படுத்தப் போதனைசெய் ஞானோப
தேசியாகி
நன்னயமின்னூர்க்குரிய நாணமடம் பயிர்ப்பச்சம்
நான்கும் பெற்றே
அன்னையிலுந் தயவதிகமுள்ள கச்சிப்பிள்ளையம்மாள்
அன்புகூர்ந்து
தன்னையுந்தன்றலைவனையு மறிவதற்கு முக்கியசா
தனமாய்ச் சாற்றும்
இன்னமுத மனையதிரு மெஞ்ஞான மாலையைப்போல்
யார்சொல்வாரே

இலாஹி

# மெஞ்ஞான மாலை

## காப்பு

## வெண்பா

அல்லாஹு வென்றே யகிலமெலாம் போற்றுகின்ற
வல்லானை யெந்நாளும் வாழ்த்துவமே—பொல்லாத
அஞ்ஞானமாயை யறுத்தொதுக்கும் வாளனைய
மெஞ்ஞானமாலை சொல்ல வே.

## மெஞ்ஞானக்குறம்

(1) உண்மையுள்ள ஞானமதை உலகிலுதித்தோர்க்கு
ஓர்மையுடனே எடுத்திங் குரைக்கிறேனிப்போதே

(2) கண்மணியாயுலகில்வந்த கச்சிப்பிள்ளை கூறும்
கருக்குழியின் ஞானமிதன் கருத்தை யறிவீரே

(3) காந்தமலைநோக்கிப்பார்க்கக் கடைமுடியுமொன்று
காணுமுச்சமலையடுத்துக் கனகமலை யொன்று

(4) வாய்ந்த மலைமக்காமந்த மக்காமொளிமேலே
மாதவமுகிய்யித்தீனற் பாதந்தலைமேலே

(5) சொர்க்கத்தினின் றிலங்குகின்ற சுடர்மணியுமிதுவே
தோன்றுமணியானமக்கா மண்டலத்துநடுவே

(6) மக்காமதின் வாயிலிலே வளரும் நாதம் பெருகி
மதிக்கு முப்பத்தொன்றெழுத்தில் மாந்தருருவாகி

(7) ஒன்பதுமாதங்கடந்தே உலகில்வந்த நூறு
ஓதிய வேதத்தி னுள்ளே யொழித்தது மெஞ்ஞானம்

(8) அன்புடனீரடிவாசி யானந்தமாய்ப் பூட்டி
அமர்ந்து நின்றஓரடியாம் வாசியையொன்ருக்கி

(9) உண்ணுக்கையண்ணுந்தே யோர்மையுடன் பார்க்க
உற்ற துவாரத்துக்குள்ளே யாறடியாங் கோணல்

(10) எண்ணுமற் கோணலிலே யிருப்பாராறு பேர்கள்
இசைந்ததெருவாறு மதற்கேற்ற வீடுமாறு

(11) அடுத்ததெருப்பார்க்கையிலே ஆறுமூலைவீடு
அந்தமூலை வீட்டினிலே ஆனுமுத்தி மகிமை

(12) நடுத்தெருவே யொருத்தனிருப்பானுயர்ந்தமேடை
நல்லமேடைதன்னைச்சுற்றி யொன்பது கற்கோட்டை

(13) கோட்டைதன்னைச் சுற்றிப்பார்க்க கோடி கோடிகாக்ஷி
கூச்சமற்றுத் தகப்பனைக்கண்டாக்ஷி செய்யவேணும்

(14) நாட்டமுடன காண்பதற்கு கோட்டை நுழைந்தேனே
நாலுகாலி னுலுகம்பம் நடுக்கால் பொன்னின் கும்பம்

(15) பொன்னின் கும்பந்தன்னில் வெகுபூமலர்கள் சூடி
பூவையர்கள் தோழன்றன்னை நேமமுடன் கண்டேன்

(16) அன்னவனைக்கண்டு சொக்கியாடி யருள்பெற்றேன்
ஆகமகிழ்கூர்ந்து சுழிமாறி நின்றடித்தேன்

(17) பூரணமாய்ச் சிறுவாசல் புத்தியுடன் கடந்தே
புக்கியிடம் விட்டு வலஞ்சுற்றியங்கே நடந்தேன்

(18) காரணமாய்ப் புரத்தொருவர் களித்திருக்கக்கண்டேன்
கண்டதைமுன்பின்னுகக் கண்டு வெளிசென்றேன்

(19) கருத்துமேற்கருத்துவைத்துக்கண்ணடையாவெண்ணம்
கண்ணடைத்த பின்னு மனக்கருத்து மேலே தூக்கம்

(20) இருகலிமாயிருக்குமந்த யிடமுங்கண்டுநுழைந்தேன்
இருக்குமந்தக்கலிமாவி லிருமூடி கீழ்மேலே

(21) கீழிருக்குமேலுலகங் கிருபையுடனுமே
கிளிமொழியாளேமேலே யேழுலகந்தாமே

(22) இந்தப் பதினுலுலகமிருக்கு மந்தத்தலமே
ஏகன் விதிப்படி [1] அருசு [2] குருசுமுதலாமே

(23) அருசில்ரெண்டுகுருசில் ரெண்டு மூலங்களுமாச்சு
ஆனகுருசில் [3] ஹக்கீகத்தானதுவுமாச்சு

(24) [4] ஆலமெல்லாம் ஹக்கீஹத்து மூலமதிலுண்டு
ஐநூறு ஆணிப்போட்டங் கமைத்தமூலமொன்று

---

1 அருசு-கிரீடம், ஆட்சிபீடம்

2 குருசு-அரசாட்சி, நாற்காலி

3 ஹகீகத்-உண்மையான, சாரம்

4 ஆலம்-உலகம்

(25) ஏழு[1] நபுசான துவு துருந்தவிடமதுவே
இருக்குமந்தவிடத்திலஞ்சு கருத்தில்முளைத்ததுவே

(26) ஐம்பத்தோரட்சரமு மானவிடமதுவே
அங்கு[2] ரூகு [3] ரூகாணியான வுடமதுவே

(27) பூமிகளுக்கெல்லா நடுப்பொதுத்தலமுமதுவே
புகழுமக்காப்பள்ளியேழு பொருந்தும் வாசலதுவே

(28) எட்டடியாங்கோணைக்கப்ப லிருக்குதுபார்வாசல்
ஏழிரண்டு வாசலுள்ளே யிருக்குமந்தச்சிறுத்தை

(29) சிறுத்தைமேலேகருத்து ராஜன் மகுத்துவமா யேறி
திகழும்மக்காப்பள்ளியெழு சிறந்தவாசல்நின்று

(30) மும்மூலங்கண்டதொரு முத்துக்குமாரத்தி
முப்பொருளுந் தேர்ந்த கச்சிப்பிள்ளையம்மாள் பாடல்

(31) காந்தவிளக்குடனே புகழ் கடவுளரைப் பார்க்கக்
கண்டேயெழுவானந்தாண்டி கருத்தாய்
மூலஞ்சேர்ந்தேன்

(32) நாயனையுநாச்சியையும் நால்மூலத்திற் கண்டேன்
நல்லிடிபோலே வேட்டுச்சத்த மங்குதேர்ந்தேன்

(33) உச்சிவட்டந்திறந்திடவே உயராகாசமானேன்
உண்மையுடனந்தரத்தில் உருக்கமுடன் நின்றேன்

(34) புருஷனில்லாப்பெண்போல் ரெண்டுபிள்ளைகளைப்
பெற்றேன்
பிரியமுடனுலெழுத்துப் பேர்ந்துவெளியாச்சு

(35) மந்திரமுந் தந்திரமு மாயமெலாம் செய்தேன்
வையகத்துமந்திரங்கள் பொய்யெனவே கண்டேன்

(36) இந்தமட்டும்போதுஞ் சொன்னேனிவ்வுலகத்தோர்க்கு
இத்தனையு மறிந்தவர்கள் முத்திபெறுவரே.

**முற்று**

---

1 நபுசு-உயிர், மணம்

2 ரூகு-வாழ்க்கையின் மூச்சு

3 ரூகாணி-ஆன்ம இயலான, புனிதமான, சமயத்துறை சார்ந்த

## மெஞ்ஞானக் குறவஞ்சி

(1) தூலமுருவான சூட்சுமஞ் சொல்லடி சிங்கி — அந்தச்
சூட்சுமஞ்சொல்லிடிற் றூரவழியல்ல சிங்கா

(2) நாதமுளைத்த நடுமூலமென்னடி சிங்கி — நாத
நடுமூலமென்றால் வெளிமூலம் ரெண்டடா சிங்கா

(3) வெளிமூலமான விபரீதமென்னடி சிங்கி — அங்கே
விரிவானசங்குமுழங்குந்தலமடா சிங்கா

(4) ஓசைமுழக்கத்தினுண்மை தெரியுமோ சிங்கி — மனம்
ஓர்நினைவாகிடிலொன்றாய்த்தெரியுமே சிங்கா

(5) மனமுந்தெரிந்தால் மறுமொழி கேட்குமோ சிங்கி அந்த
கருவுந்தெரிந்தாற் கலந்தோடிநிற்கலாஞ் சிங்கா

(6) கலந்தோடிநின்றிடிற் காரணமென்னடி சிங்கி - அங்கே
கத்தனருள் பெற்ற வித்தையறியலாஞ்சிங்கா

(7) வித்தையறிந்திடில் வேருந்தெரியுமோ சிங்கி — அந்த
வேருமறியலாந் தூருமறியலாஞ் சிங்கா

(8) சாகாக்கால் வேகாத்தலையுமறிவாயோ சிங்கி - அங்கே
தாங்கண்டு விந்துநிலையுமறிந்தேனே சிங்கா

(9) மூலமுளைத்ததில் மூன்றிலை கண்டாயோ சிங்கி - அந்த
மோனமுளைத்திடுந்தானமறிந்தேனே சிங்கா

(10) முளைத்திடுமோனத்தலத்தை நீ சொல்லடி சிங்கி - அது
முச்சந்தி வீதியின் பக்ஷமறிவாயே சிங்கா

(11) முச்சந்தி வீதியிலுற்ற பொருளென்ன சிங்கி — ரெண்டு
முத்தொளிவாகிய கிண்ணமிருக்குமே சிங்கா

(12) கிண்ணத்தொளிவிலே யென்னகண்டாயடி சிங்கி அந்த
கிண்ணத்துக்குள்ளே கிளிப்பிள்ளை ரெண்டடா சிங்கா

(13) இந்தக் கிளிப்பிள்ளை கண்டுசென்றாலென்ன சிங்கிஅங்கே
ஏழுகண் பாலத்திலேறி நடக்கலாஞ் சிங்கா

(14) பாலங்கடந்தாற் பலனென்ன சொல்லடி சிங்கி - அங்கே
[1]பாவா நபி ஆதம்பாதத்தைக்காணலாஞ் சிங்கா

(15) [2]ஆலநபியிருந்தாளுந்தல மெங்கே சிங்கி — அவர்
அண்டத்துக்குள்ளே யரசாட்சி செய்வாரே சிங்கா

(16) அண்டத்துக்கப்பால் அறிந்ததைச்சொல்லடி சிங்கி அந்த
ஆகாயத்துள்ளே யரமனை தோணுமே சிங்கா

(17) அரமனைக் குள்ளிருந்தாளுவதாரடி சிங்கி — அங்கே
அருவுருவில்லாதரசனொருவனே சிங்கா

(18) ஆளுமக ராஜனங்கே யிருப்பானோ சிங்கி — அவன்
அங்குமிருப்பதோ டெங்கும்பராபரஞ் சிங்கா

(19) எங்கும்பராபர மென்றுன தென்னடி சிங்கி — அது
தங்கிய சோதியின்றன்மயமாகுமே சிங்கா

(20) தன்மயமாகிய சங்கதி யென்னடி சிங்கி — அது
தானே தானே நின்று தம்பிரானுச்சுது சிங்கா

(21) அந்தப்பிரானைக்கண்டப்புறமென்னடி சிங்கி — இனி
அப்பரத்துக்கப்பாலாருமில்லையடா சிங்கா

(22) ஆனலொருவருமவ்விடத்தில்லையோ சிங்கி — அங்கு
தானுதனுதந்தனுதாந்தநாதமே சிங்கா

முற்று.

---

1 பாவா நபி-ஆதம் நபி, தந்தை நபி

2 ஆலம்-உலகம்

## மெஞ்ஞான ஊஞ்சல்

(1) ஆகாசமானதிலே ஒரு
அச்சுதக்கூடமடி அம்மணி
அச்சுதக்கூடமடி

(2) அச்சுதக்கூடத்திலே ஒரு
உச்சிதஊஞ்சலடி அம்மணி
உச்சிதஊஞ்சலடி

(3) உச்சித மூலத்திலே புவி
மெச்சிய வாலையடி அம்மணி
மெச்சிய வாலையடி

(4) மெச்சிய வாலையவள் வந்த
மேன்மையைப்பாரடி நீ அம்மணி
மேன்மையைப்பாரடி நீ

(5) உச்சித ஊஞ்சலிலே அவள்
உட்கார்ந்ததைப்பாரடி அம்மணி
உட்கார்ந்ததைப்பாரடி

(6) நச்சுதநடுநிலையில் ஊமை
நானென்றதைப்பாரடி அம்மணி
நானென்றதைப்பாரடி

(7) நானாகித்தானாகி ஊமை
தான்வந்துநின்றதடி அம்மணி
தான்வந்துநின்றதடி

(8) கத்தன் சிறுவாசல் ஊமை
கடந்ததைப்பாரடி நீ அம்மணி
கடந்ததைப்பாரடி நீ

(9) சித்திரக்கூடத்திலே வந்து
சேர்ந்ததைப்பாரடி நீ அம்மணி
சேர்ந்ததைப்பாரடி நீ

(10) அத்தாளென்றாமைதன்னை வாலை
யழைத்துமகிழ்வுடனே அம்மணி
யழைத்துமகிழ்வுடனே

(11) உத்தம ஊஞ்சலிலே ஊமையை
உட்காரவைத்தாளடி அம்மணி
உட்காரவைத்தாளடி

(12) செம்பிலிருந்தபாலை யூமைக்கு
சிந்தாமலூட்டினளே அம்மணி
சிந்தாமலூட்டினளே

(13) இன்பமிகுந்தேயிரு பேரும்
ஏகாந்தமாயிருந்தே அம்மணி
ஏகாந்தமாயிருந்தே

(14) அன்புடன் ஆடுகின்ற ஊஞ்சலில்
ஆட்டத்தைப்பாரடி நீ அம்மணி
ஆட்டத்தைப்பாரடி நீ

(15) வாலையும்ஊமையுமாய் ஆடிய
வாஞ்சையைப்பாரடி நீ அம்மணி
வாஞ்சையைப்பாரடி நீ

(16) சிந்தை யொடுங்கிநின்றே ஆடும்
சிதம்பரக்கூத்தாமடி அம்மணி
சிதம்பரக்கூத்தாமடி

(17) நுட்பமுடனிருந்த ஒரு
[1] நுக்தாவுக்குள்ளாக அம்மணி
நுக்தாவுக்குள்ளாக

(18) நட்புடனே யிருந்தே ஆடும்
நடனத்தைப்பாரடி நீ அம்மணி
நடனத்தைப்பாரடி நீ

(19) அண்டபிண்டமுங்கடந் தாடும்
ஆகாசக்கூத்தாமடி அம்மணி
ஆகாசக்கூத்தாமடி

(20) கண்டுகளித்தவர்க்கே முத்தி
உண்டென்றறிவாயடி அம்மணி
உண்டென்றறிவாயடி.

முற்று

---

1 நுக்தா-புள்ளி

# மெஞ்ஞானக் கும்மி

(1) கும்மியடி பெண்காள் கும்மியடி எங்கள்
[1] ஹுப்பான பெண்களே கும்மியடி
சம்மதமெஞ்ஞானக் கும்மியின் பாடலைச்
சாற்றிக்கும்மியடியுங்கடி நிதம்
போற்றிக்கும்மி யடியுங்கடி

(2) ஆதிமுதலோன்றனை நினைந்து நிதம்
[2] ஐந்தொகுத்துந் தொழுதே புகழ்ந்து
ஓதிமுகம்மது பாதமனுதினம்
உகந்து கும்மியடியுங்கடி மிக
மகிழ்ந்து கும்மி யடியுங்கடி

(3) அற்புதமானதோர் கோட்டைக்குள்ளே நல்ல
அக்ஷரமுப்பத் திரண்டாமடி
அக்ஷரமாமுத்து வெள்ளைக்குள்ளேநின்று
ஆடிடும் வேசை யொருத்தியடி நீங்கள்
பாடியேகும்மி யடியுங்கடி

(4) பாஷையிலானதோர் வார்த்தையெல்லாம் வேசை
படித்துநொடித்துத் தள்ளுகிருள்
வேசையைத்தான் விட்டுமேனேக்கிலைந்த
வீதிநாலுந் தெரியுமடி நிதங்
ஓதிக்கும்மி யடியுங்கடி

(5) அடிசிறுவாசற் கலிமாவாம் [3] ஹயாத்
தங்கேமுளைத்த கருக்குழியாம்
உடலுமுயிரு முளைத்ததுவா மிதில்
உள்மூலமானது மொன்ருமடி நீங்கள்
உகந்துகும்மி யடியுங்கடி

(6) சந்திரர் சூரியர் வந்துலாவும் மங்கே
சாற்றுஞ் சுழிமுனை வாசியோடும்
ஐந்துமுளைத்த அடையாளந்தன்னை
அறிந்து கும்மியடியுங்கடி அதைத்
தெரிந்து கும்மியடியுங்கடி

---

1 ஹுப்பான-அன்பான

2 ஐந்தொகுத்து-ஐவேளை

3 ஹயாத்-வாழ்க்கை, காலங்கள்

(7) ஐந்துமுளைத்த அடையாளங்கள் கண்டால்
அஞ்சுபுலன் களவைதாண்டி
முந்திமும்மூல முளையாகும்மூல
முனையிருகண்ணிதழாமடி கண்டு
முழங்கிக் கும்மியடியுங்கடி

(8) அங்கேயிருக்குங் கிளிப்பிள்ளையைக் கண்டு
ஆனந்தமாகுவீ ரற்புதமே
திங்களொளிமேடை தன்னில் முகிய்யிதீன்
சித்திரவிஸ்தாரப் பள்ளியடி அங்கு
பத்தியாய்க்கும்மி யடியுங்கடி

(9) பள்ளியில்வந்து தொழுதல்லவோ வானோர்
[1]பாத்திஹா ஓதிதுஆஇரப்பார்
பள்ளியைவிட்டுமேற் பார்த்திடிலங்கே
பரமசிவன் வீடுதோணுமடி நேர்
திறமுடன் கும்மியடியுங்கடி

(10) ஈஸ்வரன் வீடங்கே தோணுமடி யதில்
ஏகப்பயமாயிருக்குமடி
ஆசைவைத்துப்பயமற்று நீ சென்றிடில்
அந்த விருளுமறையுமடி இடை
வந்ததிரையும் விலகுமடி

(11) நானும் நீயுமே நேசமானோர் பர
நாதாந்த வீட்டிலே சேர்ந்திடலாம்
ஞானவீடாளும் அத்தானைக்கண்டு நாம்
நாடிக்கொள் [2]காபகௌசியடி சென்று
தேடியே கும்மியடியுங்கடி

(12) கிருபையுள்ளமாதா வீடு சேர்ந்தேன் பச்சைக்
கிண்ணத்திலெனக்குப்பால் வார்த்தாள்
பெருமையாய் வாங்கிப்பருகிடவே யண்ட
பிண்டமில்லாங்கடந்தேனேயடி மனங்
கண்டதே கும்மியடியுங்கடி

---

1 பாத்திஹா-பிரார்த்தனை

2 காபகௌசி-வில்லின் இடைவெளி, நெருக்கத்தைக் குறுக்கக் கூடியது

(13) கத்தன் வளரண்டபிண்டமெலாங் காக்ஷி
கண்டு பரவெளிசெல்லுமிடம்
பத்துவயதுள்ள[1] பக்கீற் பையனென்னை
பாதிவழியில ழைத்தாண்டி ஜெக
சோதியாய் கும்மியடியுங்கடி

(14) பார்த்தவதிசயம் பாடிக்கொண்டா னவன்
பாங்குடனே விளையாடிக்கொண்டான்
சேர்த்தேயருளையுந் தேடிக்கொண்டானென்று
செப்பிக்கும்மியடியுங்கடி மனம்
ஒப்பிக்கும்மி யடியுங்கடி

(15) செல்வம் பொருந்தும் மிளையான்குடி நகர்
சேர்ந்திடும் லொக்குமான் ஹக்கீம்மகள்
கல்வியறியாத கச்சிப்பிள்ளை ஞானக்
காக்ஷியைக்கண்டு கும்மிபாடி நீங்கள்
மோக்ஷமென்றே கும்மியாடுங்கடி

(16) வல்லோனிறசூல் மனம்பொறுக்க விந்த
மானிலத்தோர்கள் மனம்பொறுக்க
நல்லபதவி பெற்றெல்லோரும் வாழ்கவே
நாடிக்கும்மியடியுங்கடி தினம்
தேடிக்கும்மியடியுங்கடி.

---

1 பக்கீர்-ஏழை, தேவையுள்ளவன்

முற்று

## வாழி விருத்தம்

பூதல மோங்கும் வாழி
புண்ணியந் தழைத்து வாழி
வேதியர் பலரும் வாழி
விளங்கு நற்றவங்கள் வாழி
பேதமை யான கச்சிப்
பிள்ளை யம்மாளும் வாழி
மாதவர்க் குரு மெஞ்ஞான
மாலையும் வாழி மாதோ!

முற்றிற்று.

இலாஹி

மஹபூபுசுப்ஹானி அப்துல்காதிறுஜெயிலானி

முஹிய்யித்தீன் ஆண்டவரவர்கள்பேரால்

இளையான்குடி மாநகர முஸ்லிம்கள் நடாத்திய கந்தூரிமஹோற்சவமும்

பள்ளிவாசல் நகர் ஷாஹாபாபா

பகுர்தீன்சாஹிபொலியென்னு மியலபிதானமுள்ள

காட்டுபாவாசாஹிபொலியவர்களின் கந்தூரிமஹோற்சவமும்

பிரான்மலை அப்துல்வாசாஹிபொலியவர்களின் தெரிசனவிசேஷமும்

அடங்கிய

# சிங்கார வழிநடை லாவணி.

இஃது

இராமநாதபுரம் ஜில்லா இளையான்குடியில்

மகா-ள-ள-ஸ்ரீ

செ. அசனுசன் ராவுத்தரவர்கள் குமாரரும்

ஷெயூர் மகா-ள-ள-ஸ்ரீ

சி. குப்பப்பிச்சை அம்பலம் அவர்களின்

மைத்துனருமாகிய

மகா-ள-ள-ஸ்ரீ

## செ. அ. சீனியாவல் ராவுத்தர்

அவர்களாலியற்றப்பெற்று

சிவகெங்கை மகா-ள-ள-ஸ்ரீ

## மீ. பீ. முகம்மது சுல்த்தான் ராவுத்தர்

முயற்சியால்

சிவகங்கை

ஸ்ரீ கலா பிரஸில், பதிப்பிக்கப்பெற்றது.

1918

இதன் விலை அணு 3

## சாற்றுக்கவிகள்

இஃது சிவகெங்கை

## அரு. சு. வெண்ணிமலைப் பிள்ளை

அவர்களாலியற்றியது.

### அறுசீர் விருத்தம்.

சீருறுதண் மதிதவழுஞ் செழியபிரான் குன்றமதிற் சிறப்பு வாய்ந்த
பாருறுபூம் பொழிற்காட்டு வாபள்ளி தனிவிளைசைப் பதியி லென்றும்
நேருறுமெய்த் தொண்டர்கொடும் பவநீக்கிப்பெருவாழ்வு நிலையை நல்கித்
தாருறுமெவ் வுலகினும்பேர் தழைப்பவளர் முன்றூலிமார் தங்க டன்மேல்

சிலைமதனை நிகர்வடிவன் கலைமுழுதுந் தெளிந்தநல்லோர்
சித்தத்தார்ந்தோன்
நிலைபெறுதீன் குலத்துதித்தோ னுயர்சீனி யாவலெனும்
நேர்மை யாளன்
தலையுறைமெய்ப் பக்திமிகச் சார்ந்துறச்செந் தமிழ்மொழியாற்
றக்கோர் மெச்ச
அலையுயர்தெள் ளமுதெனவோர் வழிநடைச்சிந் துரைத்திசையே
யார்ந்திட் டாலல்

---

இஃது சிவகெங்கை ஜவுளிக்கடை மகா-ள-ள-ஸ்ரீ

## வெ. பெரியசாமி சேருவைகாரரவர்கள்

இயற்றிய

### எண்சீர் விருத்தம்.

சேட்டுவா மதிதிகழும் மணிமா டங்கள்
செறியிளசை நகர்சீனி யாவ லென்போன்
தேட்டுவாய் வழிநடைச் சிங்காரச் சிந்தை
செகத்தினுயர் கொடுங்குன்ற மதிலுஞ் சேர்ந்த
காட்டுவா பள்ளியிலும் முவப்புற் றென்றுங்
கருணைமிகுத் தொளிர்வுலி யாக்கண் மீது
வேட்டுவான் கனிகனியக் கண்டுரைய
வெல்லமினி வெல்லமென விளம்பி னானல்.

புதூர் மின்னூறுதீன் வம்சம் சதுர்முத்தமிழ் விசித்திரம் மதுரகவி

## அல்லாபிச்சைப் புலவர்

### இயற்றியது

### அறுசீர் விருத்தம்

பூமேவுமடல்வாழை பளகமனமதிவினதிப்
பொருந்த லெங்கும்
காமேவுமுகிலணி விண்ணுடுவெனவே தரளமின்சங்
கதிற்சியுற்ற
மாமேவுமிளசைநக ரசனுசைன் வளமுத்து
மகவென்னும்
நாமேவும்புகழ் சீனியாவலெனு மிலாவணியம்
நட்பதாமே

---

இராமநாதபுரம் ஜில்லா இளையான்குடி நகர் இயற்றமிழ் வித்வான்

## ப. கா. பண்டிதம் செய்யிதப்துல் காதிறவர்கள்

### இயற்றியது

தேனிருந்த மலர்களெல்லா மதுகரங்களிசை பயிலச்
செறிசோலைக்கண்
வானிருந்த முகிலினங்க ளடைகிடந்து மதிதொறும்
மாரிபெய்ய
மீனிருந்த தடம்பெருகிப் புறத்தோடிச் சாலிவளர்
விக்குஞ் செல்வக்
கோனிருந்தங்கரசுபுரி பதியனைய நகரிளையான்
குடியாமன்னே
அப்பதியின் முசுலீங்களாண்டகை முஹிய்யித்தி
னவர்களுமஞ்
செப்பியுரு செடுத்த முறையுடன் பள்ளிவாசனகர்
சேர்ந்து நாளும்
ஒப்புயர்வற்றிலங்கி வளர்காட்டு பாவாசாஹிப்
பொலியுல்லாவின்
அற்புதங்களோடுபிரான் வெற்பிலுயரொலிபுகழும்
அறைந்தான்மாதோ

சிங்கார வழிநடைலாவணிப் பெயர் கொளிந்நூலைத்
தெளிந்து பார்த்த
கங்காரந்தனைவிடுத்துப் புலவரெல்லாந் தம்மூக்கிற்
கரங்கள் வைத்தே
இங்காரம் மாவுரைப்பரிதனை நிகரெனப்புகழ
வியம்பினான்
லங்கார நகரிளசைவளர்சீனி யாவலெனும்
நாவலோனே

---

முற்றியது

இலாஹி

# சிங்கார வழிநடை லாவணி

காப்பு

## அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

சீரோங்கும் இளசைநகர்த் தீனோர்களொலிமுகியித்
தீனைப்போற்றிப்
பாரோங்குமுருசெடுத்த பண்பொடுநல் வளமிகுந்த
பள்ளிவாசல்
ஊரோங்குமகிமையுள காட்டுபாவாசாஹி
பொலியுருசும்
காரோங்குபிரான் மலையினொலி புகழுமுரைக்கவல்லோன்
காப்புத்தானே

---

## நூல் லாவணி மெட்டு

(1) தேனேகுயிலேயிளமானே இளசைநகரன்று
[1] றபீயுல்லாகறென்று நவில்மதிபத்தொன்று-அதிற்
சிறந்தஉருசதனை மகிழ்ந்து தெரிசிக்கலாமின்று

(2) காரணரவுலியாநாதர் முஹியித்தீன் உருசு
[2] சந்தல்மிகப்பெருசு சாலைநகர்க்கரசு-அங்கு
கன்னியரேபார்த்து ஏகித்திரும்பிடலாம் [3] விரசு

(3) சீரிலையான்குடி மானேதெரிசித்திடவாராய்
எந்தன்கூடநேராய் இடையிலுடைசீராய்-வெகு
தேனே அலங்கிர்தங்கள் பார்த்துத்திரும்பலாமே
ஜோராய்

(4) காரிகை பரிமளந்தேய்த்துக் குளித்துமணங்காட்டிக்
கொண்டைக்குப் பூச்சூட்டிக் கூந்தல்மயிர்மாட்டி-இரு
காலில் மிஞ்சிகொலுசு கையில்வளையல்களைப்பூட்டி

---

1 றபீயுல்லாகீர்-அரபி மாதத்தில் 4வது மாதம்

2 சந்தல்-சந்தனம்

3 விரசு-விரைவாக

(5) காதிற்றங்கச்சிமிக்கி ஓலை அலுக்கொத்துக்கள் கூட்டி
கனகநத்துப்பூட்டிக் கழுத்தில் நகைமாட்டி-எந்தன்
கன்னிவிலையுயர்ந்த சரிகைச்சேலையிடையிற் சூட்டி

(6) அகிலமீதிசைபெருஞ்சகியே புனுகுஜவா தூட்டு
அங்கிதனைப்பூட்டு அழகுதனைக்காட்டு-எந்தன்
அன்னமே கண்ணுக்குச் [1]சுருமாவிழிகளின்மை தீட்டு

(7) வாராய் நம்மனைவிட்டு நேராய் நடந்திடவே ரோட்டு
தோகையர்கள் பாட்டுச் சொகுசுடனே கேட்டு-அக
மகிழு நா. ம. நாகூர்க்கனி பங்களா நீட்டு

(8) மானே மரகதமே மயிலேகுயிலன்னமே வாடி
சாலைநகர்தேடி சரசிவிளையாடி-இங்கு
வசிக்கும் நா. உ. நாகூர்க்கனி வீடுமேன்மாடி

(9) வேல்விழியாளேயிதோ தோணுதய்யாவுமனை நாடு
வெ. ம. வீடு வீதிவழிகூடு-வெகு
விசித்திரமே செய்யதிபுருகிமனையே கொண்டாடு

(10) பாதையில் அல்லாபிச்சை அம்பலம் மாளிகை பாராய்
பெருமாள்கோவிற் சீராய் தெருவீதியிற் சேராய்-தர்மப்
பள்ளிக்கூடம் ரிஜிஸ்தராபீசு கண்டு மனந்தேராய்

(11) காரிகையே இது கடைவீதிப் பூப்பந்தலழகு
வெகுஜனங்கள் விலகு வேண்டுங் கடையொழுகு-நேர்
கட்டிட மளிகையிலனேக விசித்திரங்கள் பழகு

(12) பாவையே தீனோர்கள் வாழும்பல தெருக்கள் நேரு
மாடகூடஞ்சீரு மாளிகைகள் பாரு-எங்கும்
பாங்காய் வளர்ந்திடுவாரின்னகர் முசுலிம்கள் [2]தேரு

(13) சாரட்டுவண்டிகளும் ஜாரிஜாரி ரேக்களாகவும்
வேகமாயுலாவும் வீதியெங்குமேவும்-வெகு
சந்தோஷமா யரசரேறும் பரிகள் மிகத்தாவும்

(14) முத்துவயிரங்களும் பச்சைகள் விற்குங்கடைவீதி
மோகனமாலையாதி முழுவயிரச்சாதி-இங்கு
முன்கைவளையலுடன் தங்கச்சிமிக்கிவெகுஜோதி

(15) பட்டுச்சவுளிக்கடை மிக்கச்சொலிக்குது பார்நாரி
பாவையலங்காரி பார்த்துமனந்தேறி-இன்னம்
பலவர்ணச்சீட்டிகள் விற்குங்கடைகளிருசாரி

---

[1] சுருமா-முஸ்லீம் பெண்கள் கண்களின் கீழ் இமையில் பூசிக் கொள்ளும் கரியநிற அலங்காரப் பொருள்

[2] தேரு-அறிந்துகொள்

(16) மிட்டாயிதேன்குழல் லட்டுகள் வேண்டுகிருர் பாரு
முல்லைமலர் நாறு முகரும் பனிநீரு-மணம்
வீசுஞ்சந்தனமததர் புனுகு ஜவாதுக் கடைஜோரு
(17) தேங்கு பலாக்கனிகள் சேர்ந்த நாரத்தை கொய்யாவாகு
மெலுமிச்சையிதாகு மிதிலனேகமாகு-மெந்தன்
தேனே மாங்கனிகள் தித்திப்பு மாதுளைகளாகும்
(18) வாலவயதுடைய கோலமயிலன்னமே வாராய்
வணிகர்மனைஜோராய் மகிழ்ந்துகண்ணுல் பாராய்
-இங்கு
வளரும் வாணிபர்வீதி வண்ணுர் தெருக்கடந்துநேராய்
(19) வேதியர் சாஸ்திர மோதும் வேளாளரின் வீதி
விநோதம் பலஜாதி வெகுபேர்களே நீதி-பார்த்து
மேலான ஜமிந்தாரி தாலூகாகச்சேரியே ஜோதி
(20) சித்திரப் போலீசிது செட்டியார் சத்திரமே பாரு
சிவன் கோவிலைத் தேரு தெருவிலம்மனேரு-இங்கு
தெய்வ பொஷ்கரணியுந்தானே தொழுகை மேடைசீரு
(21) பள்ளியலங்கிர் தங்கள் மெல்லியே பார்த்திடு நேராய்
[1]மவுலூதுகள் சீராய்வாசம் பலவாருய்-மிகு
பாங்கான [2]மதுரசா கட்டிடந்தோணுது பார் ஜோராய்
(22) வாளவந்தாள் கோவில் யூனியனுபீஸ் பள்ளிக்கூடம்
தபாலாபீசு பீடம் தந்தியாபீஸ் மாடம்-விட்டு
வாரா யாசுப்பத்திரி தாண்டி யுரைக்கிறேன் விசேடம்
(23) தம்பூருச்சத்தங்கள் கொம்பு குழலோசை [3]யேகம்
ஜனங்களுமனேகம் ஜாரியிரு பாகம்-வெகு
சங்கீர்த கிண்கிணி யெங்குமுழங்கு திசை ராகம்
(24) கொட்டுகளிடியெனக்கு முறிமுழங்குதாரவாரம்
ஆலவட்டந்தீரம் அதிகவலங்காரம்-வெகு
கொடிகுடைவிருதுகள் கும்பலாய்வருகுதிந்நேரம்
(25) [4]தீனேர்கள்சாலைநகர் தெற்குபள்ளிக்கொடிமேட்டில்
நின்றுபாராய்ரேட்டில் நேர்ந்தகப்பலோட்டில்-வெகு
சித்திரவேலைகளைச்செய்து நிறைத்தனரே கூட்டில்
(26) முத்துவயிரம்பச்சை மோகனக் கூட்டின்மிசையிருத்தி
கண்ணுடிக்குடந்திருத்தி காந்தவிளக்குப்பொருத்தி
-வெகு
மோடியுடன்சிகரத்தாடுந் தங்கக்கலசம்நிறுத்தி

1 மவுலூது-பிறப்பு
2 மதரஸா-பள்ளிக்கூடம்
3 ஏகம்-எங்கும்
4 தீனேர்கள்-முஸ்லீம்கள்

(27) விரும்புமழகுள்ளாளே வீதிவடக்குப்பள்ளிவாராய்
வேகமுடனேராய் வெகுவிநோதம்பாராய்-நாம்
விசித்திரச்சேகப்பா பள்ளிமுன்னேதினம் சீராய்

(28) ஜாரிஜாரியாகஜவுளிஷாப்புக் கடைகள் சயிட்டு
சகலவஸ்தும்பகட்டு ஜனங்கள்வெகுதிரட்டு-இந்த
சாலைநகரில்மிகு சந்தோஷபூக்கடைகள் ரயிட்டு

(29) கன்னல் ரசமேயமு தென்னவுரைசகியேவாடி
ஜனங்கள் மிகக்கூடி சந்தனக்கூட்டை நாடி-தூக்கி
காரிழையே போரார் சீரிளையான்குடி தேடி

(30) கூடது சுற்றுகிறவேடிக்கை பார்த்திடு மானே
குபுகுபெனத்தானே கூட்டுடனே தேனே-வெகு
கும்பல்பகவத்திக ளெங்கும் ஜொலிக்கப்பகற்றுனே

(31) அதிர்வேட்டு மத்தாப்பு வாணம்பலவகையாம் நேராய்
அலறிவருஞ்சீராய் அந்தரத்தினிற் பாராய்-வெகு
அற்புத அவிட்டுகள் டப்பென்று வெடிக்குது தேராய்

(32) தீப்பந்தம் வீசுகிறார் சித்திரக் கப்பலோட்டஞ்சீரு
தீரர்குஸ்திபாரு ஜெகத்தோர் கூட்டந்தேறு-நல்ல
சிங்காரமானசதுர் சித்தினியாட்டம் வெகுஜோரு

(33) இஷ்டமுடன் தீனோரேகித் தொழுகிற நன்மேடை
இறைவன் றிருவீடே யெங்குஞ்சனம்நாடே-மிக
இன்பமுடன்கூடு யேகிவருது ஜனத்தோடே

(34) [2]பாத்திஹாவோதியேபள்ளிவிட்டேகுங் கும்பற்பாட்டுப்
படிப்பதைநீகேட்டுப் பலர்களுங்கோலாட்டு-அடித்து
பாங்காய்வருகுதுபா ரேகமுச்சந்தியிது ரோட்டு

(35) சிங்களர்வங்காளர் சிற்றுக்கிராம ஜனக்கூட்டம்
கடைவீதியில்நாட்டம் கப்பலின்மேலாட்டம்-பார்த்து
தேனேபட்டாளங்களுஞ் சுட்டுப்பழகுதல் சிரேட்டம்

(36) நேரேஇருக்கும்ரிஜிஸ்த ருபீசுநெடுரோட்டுத் தாண்டி
பள்ளிக்கூடமீண்டி பாவடியுந்தாண்டி-மிக
நீடித்துத்தீனோர்கள் வாழுந்தெருக்களிது காண்டி

(37) கூடுவருகும்பிரகாச மிலங்குதெங்குந் தானே
குருப்பூஹெரட்டுமானே குணமுளசீமானே-சீனு
கூனச்சிக்கந்தர் பாக்ஷாஅம்பலம் மாடியிதுதேனே

---

1 சயிட்டு-காட்சி (Sight)

2 பாத்திஹா-பிரார்த்தனை

(38) ஏரிக்கரைரேட்டு ஏகுது ஜனத்துடன் கூடு
திருமதிலும்நாடு சிங்காரக்கொடிமேடு-பார்த்
திறக்குரார்பூப் பந்தலிறையவன் பள்ளிகொண்டாடு

(39) தீனேர்கள் தொழுதிடும்மானே இளசைநகர்ப் பள்ளி
சுற்றுச்சுவர்வெள்ளி சோடினைகள்தெள்ளி-மிகத்
துலங்குங்கதவுநிலை வயிரங்களழுத்தின புள்ளி

(40) நேரேபகவத்திகள் தேனேஜொலிக்குதுபார் நேர்த்தி
மணிவிளக்குமேற்றி மவுலூதுகள் சாற்றி-அங்கு
நிற்குமணருமீதில் வெற்றிக்கொடியிலங்குங் கீர்த்தி

(41) காரணமிகுந்திடுங் கீழப்பள்ளிமுன்னுற் சென்று
அன்புடனேநின்று அரியதுவாவிண்டு-நாம்
காணிக்கைசெலுத்தியே நாருசாவாங்கிடுவோமின்று

(42) பார்வாழும் வீரர்கள் பந்தங்கள் வீசும் பிரகாசம்
பாங்கியேசந்தோஷம் பார்த்து மகிழ்நேசம்-ரதி
பாவையேசிலம்பங்கள் வீசுகிருரே பாருல்லாசம்

(43) பாத்திஹாஓதியே தூக்குகிருர் சந்தனக்கூடு
சாலைநகரோடு ஜனங்கள் மிகுநாடு-இந்தப்
பதிவிட்டுச் சாலைநகர்க் கேகும்வழியிது கொண்டாடு

(44) வந்துவெகுநேரங்கள் மாதேவிடியற் காலங்காணே
வருவாய்வழிமானே மனமகிழ்ந்துதேனே-நாம்
வசித்திடும் வீதியிது வந்திடுநம்மனைக்குத் தானே.

---

1 பகவத்தி-ஊதுபத்தி

2 நாருசா-பிரசாதம்

முற்றிற்று

## அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

புள்ளிமான் விழியே யிந்தப் புதுமை
சேரிளசை தன்னிற்
றெள்ளிய மகிமை யெல்லாந் தெரிசனை
புரிந்தோ மீண்டுங்
கள்ளரைக் கருவறுத்த காட்டுபா
வாநன் ஞதர்
பள்ளி வாசலின் கந்தூரி பார்த்தக
மகிழ்வோம் வாராய்

(45) ஆரணராங்காட்டுபாவா பள்ளிவாசல் நன்று
அவர்தருகாச்சென்று அன்புடனே நின்று-நாளும்
அரியதுவாஓதித் தெரிசனைசெய்யவாரா யின்று

(46) காரணரவுலியா உருசுறபீயுல்லாகற் மாசம்
தேதியீரேழ்நேசம் திகழும்விசுவாச-முள்ள
காட்டுபாவாசாய்பு கருணைத்[1] தருகாவிற் சந்தோஷம்

(47) சுந்தரமாநகரைக்கண்டு தெரிசித்திட வாராய்
சொகுசுடனேநேராய் தோகையரேசீராய்-எந்தன்
தோழியலங்கிர் தங்கள் பார்த்துத்திரும்பலா முஜாராய்

(48) கிருபைபெருகுங்காட்டு பாவாபள்ளிசெல்வோ மாதே
வார்த்தைதவருதே வரத்தா மதிக்காதே-சிவ
கெங்கைதிருப்பத்தூர் சென்றுவழிநட இப்போதே

(49) தேனேஇளையான்குடி மானேநம்மனைவிட்டு வாராய்
தோழியுடன்சீராய் சொகுசாய்வண்டியேருய்-ரேட்டு
சென்றுசிக்கந்தர்பாவா அம்பலம்மாளிகையைப் பாராய்

(50) ஜாரியேவாப்பம்பலம் அய்யாவுகண்ணுபாக்ஷாமனையே
அடுத்த தெருமுனையே அன்புடன்கண்டனையே-நேர்
சக்கரையம்பலங் கட்டிடமேபசுந்து நினையே

(51) தாண்டிமையதீன்பிச்சை நீண்டமனையிதுவே பாரு
அப்துல்லாமனைநேரு அடுத்துமடைதேறு-ஏரி
தானேஅலங்கிர்தத் தோப்புத்தருக்கள் வெகுசீரு

(52) காரிகையே தெங்கு கமுகு பலாமரங்கள் பாராய்
கலிபாகோரிநேராய் காணுதுபார் ஜோராய்-மிகு
[2]கபுறுஸ்தானிவைகளில் மிகுதீனோரடக்கங்கள் சீராய்

(53) கோதையே அலங்காரக் கோசாலெப்பை கோரிகண்டு
வெகுஜமாதிங்குண்டு வேண்டுகிருர்நன்று-இங்கு
குறித்திடுங்கமீதம்மாள் கபுறுஸ்தான் முன்னிலையில்
நின்று

(54) பாத்திஹா தோப்பினில் ஓதிச்சாலைவழிகாட்டு
வண்டிசெல்லும்ரேட்டு மனவேகமாயோட்டு-நேர்
பாதைவழியிற் றிருவேங்கடமெங்குஞ் சோலைநீட்டு

---

1 தர்கா-அடக்கஸ்தலம்

2 கபுறுஸ்தான்-புதைகுழி

(55) நங்கையே புதுக்குளம் நஞ்சைகள்கண்டுமனந்தேறி
நடந்திடவே கோறி நவிலுஆமீன்கூறி-அப்பால்
நதிக்கரைதாண்டி முன்னுகவே ரேட்டினிலேறி

(56) தாண்டுசீராத்தங்குடி தடியமங்கலமிதுவாகும்
சோலேவழிபோகும் சூரவந்தியாகும்-நேர்
தாரைவழிமேற் செம்பனூருகடந்துமுன்னுலேகும்

(57) தாவிநடந்திடவே சாத்தரசன் கோட்டையைக்கண்டு
செங்குளமேயுண்டு நெடுங்குளமேயண்டு-வரத்
தாமதிக்காதே விசுவாசகியே மகிழ்கொண்டு

(58) கோதையே ஊத்திக்குளங் கோவிற்குளமுங்கண்டதோடு
கூத்தாடியாத்தூர்நாடு கோரியைக்கொண்டாடு-நிதம்
கொஞ்சுங்கிளியே அபரஞ்சிதமேதுதிபாடு

(59) கீழ்பாத்திக்கண்மாய்க்கரை ரோட்டுப்போகுதினிப்பாரு
சேங்கைக்குளம்நேரு சிவகெங்கையைச்சாரு-புதுக்
கெம்பீரமான ஆசுபத்திரி கண்டுமனந்தேறு

(60) அயிலாண்டேசுபரி சத்திரந்தன்னைக்கண்டு தேறி
மொட்டப்பக்கீர்கோறி முன்புதுவாக்கூறி-எந்தன்
அன்னமே பொன்னயசாமி தன்னூரணிசாரி

(61) பாவையே பத்துநோம்புச் சாவடிதாண்டிமுன்னுடு
காதர்பாக்ஷாவீடு கடந்துவழிகூடு-ரோட்டுப்
பக்கத்தில்அய்யாத்துரை ராவுத்தர்மனையேகொண்டாடு

(62) தோழியரே சொந்தச் சுலேயுமான் மாளிகைபாராய்
சுந்தரியேவாராய் சுகமிகுந்துட்காராய்-இங்கு
சொகுசுடன் அறுசுவை யுணவுபுசித்தனமே சீராய்

(63) ஆசைக்குகந்த விசுவாசகியே வடக்காக
விடைபெறுவாயேக விதரணவிவேக-முள்ள
அன்னமேவண்டிதனிற் கன்னியருடனேறிப்போக

(64) நேராகச்சாத்தய்யா மாணிக்கஞ்சேர்வைமனைசாரி
நின்று பனந்தேறி நேரேயலங்காரி-எங்கும்
நீடித்தபேட்டைகண்டு நேர்கமிஷன் கடைமுன்னேறி

(65) முன்னிட்டதே சகிமேல் புரமதிசயச்சயிட்டே
மளிகைக்கடைபகட்டே வாங்குஞ்சனத்திரட்டே-கா
முஸ்தபா ரூமசாமி கடைகள்விற்குஞ்சரக்கு புசுட்டே

(66) கன்னியரே லெவைத்தம்பி கபுறுஸ்தான் சோதி
காரணங்கள் நீதி கண்டு [1]துவா வோதி-எந்தன்
காதலியே கடந்தேக முன்னுற்பள்ளிவீதி

(67) பள்ளியலங்கிர் தங்கள் மெல்லியரேகண்டு தேறு
பாங்கியரேநேரு பார்த்துக்களிகூறு-ரத்னப்
பவளக்கால்நிறுத்தி அமைத்திங் கிருப்பதுவே சீரு

(68) வெற்றிக்கொடி மணருமுத்துங் கலசமலங்காரம்
திரும்திற்சிங்காரம் தேனேபாரொய்யாரம்-இங்கு
வேண்டித்தொழும்பள்ளியை தாண்டுமுச்சந்தியே
கெம்பீரம்

(69) மிட்டாயி தேன்குழல் லட்டுகள் விற்குது கூறிப்
பழக்கடைமுன்னேறி பலசர்ப்புகள்தேறி-மணம்
வீசுஞ்சந்தனமத்தர் பனிநீர் புனுகுக்கடைசாரி

(70) பவனிபோலேகவே பலசரக்குக் கடையோர்சயிட்டு
பலவும் விற்கும்பகட்டு பரிமளப்பூ ரயிட்டு-வெகு
பட்டுப்பணிதிவிற்கு மிக்கஜவுளிக்கடைமெரிட்டு

(71) வருவாயிதே வழியில் வரிசைருவுத்தர் ஷாப்புப் பாரு
பம்பாய் சிங்கப்பூரு பணிகள்மிகஜோரு-சீமை
வங்காளங்கல்கத்தா மதராஸ்தினுசுவெகுசீரு

(72) இன்பமுற்றுளே இஸ்மாயில்ருவுத்தர்கடை ரேட்டு
ஜவுளிக்கடைநீட்டு ஜனங்களுங் கொண்டாட்டு-அங்கே
இருக்குஞ்சவுளிகளைப் பெருக்கமாய் வாங்கிருர்பார்
கேட்டு

(73) நேரேயிருக்குமக ராஜனரண்மனை முன்னின்று
சித்திரங்கூடங்கண்டு சிந்தைக்களி கொண்டு-மிக
நேர்த்திமிகுந்த தேவஸ்தானக் கச்சேரியுங் குண்டு

(74) உன்னதமான தொரு உக்கிமஸ்தான்பள்ளி தேறி
வளவிமஸ்தான்கோறி மகிழ்ந்துஆமீன்கூறி-அவர்
உகந்திடும்பேர்களுக்குக் கருணைசெலுத்துமுபகாரி

(75) தேனேபார்தெப்பக்குள மானே சித்திரமைத்தாலே
ஜனங்கள் கூட்டத்தாலே ஜலதீர்த்தங்களாலே-மீன்
தேள்ளிகெளிறு வரால் வாளைகள் துள்ளுந்தண்ணீர்மேலே

(76) வெண்பரிமீதுசவாரியேறிச் செல்வாரனேகர் கூட்டம்
அச்சுவண்டியோட்டம் அங்குபரிவாட்டம்-வெகு
வேடிக்கை செய்கிற வீரஜவான்களே கொண்டாட்டம்

1 துஆ-பிரார்த்தனை

(77) தேசிகன் கோவிலிது ராஜாங்கஸ்கூலுந்தமாசு
மேற்குப்போலீசு மேஸ்திரேட்டாபீசு-கார்த்திய
தேவர் குளத்திநல்ல நீர்நிறைந்திருக்குஞ்சபாசு

(78) சிவகெங்கை காஞ்சரங்கால் தாண்டிச் சோளபுர
ஸ்தலமே
சிங்காரமானகுளமே தெருவீதிகள்வளமே-இங்கு
சிறப்புப்பாடசாலை ஆலயந்தாலுகா நலமே

(79) மடந்தையே வாராயோடி மிகுந்த அதிசயங்களுண்டு
வெகுவனங்கள் கண்டு வெள்ளைக்கல்லுமண்டு
-பொட்டல்
வடகாடுயெல்லையிது மறித்ததிடுங்கள்ளர் பயமுண்டு

(80) பொற்பூவணிகளப நற்பூங்கொடியே யடிவாராய்
ஒக்கூர்பதிதேருய் உயர்வணிகர் சீராய்-வாழும்
பூமிதனிற் சரசமாதே மதகுபட்டிபாராய்

(81) போலீசு தெப்பக்குளம் வீடுகள் பார்த்திடுமானே
மண்மலையுத்தானே வன்மனேகந்தேனே-அதைப்
போக்கிநடக்கக்கோரி புதுமை துவாவேர்திக்கானே

(82) அரிவையே நேரடிஅரளிக்கேட்டை ஆறுகண்டு
அதன்மிசையேசென்று அக்கரையே அண்டு-அங்கு
அழகு மண்டப படி அடுத்துச்சாலைவழியுண்டு

(83) தேனேவருவாயோடி சிறந்த மாவேலிக்கண்மாய் பாரு
தெளிந்து மனந்தேறு திருக்கோஷ்டியூரு-இங்கு
தேவாலயம் பெருமாள்கோபுரமடிசாயாநேரு

(84) சிங்காரத்தெப்பக்குளந் திருப்பாக்கடலிதுவே மானே
சோசியர்குளத்தானே தோப்பிலுப்பை கானே-அங்கு
தென்றற்குயிலினங்கள் சொந்தக்குரலோசை
கண்டேனே

(85) தாழைமலர்கள் வீசுந்தண்ணீர்ப்பந்தலிது பாரே
தாசிதர்மஞ்சீரே சகிகாட்டாம் பூரே-சாலை
தாண்டியே முள்ளிக்குண்டு மீண்டுவந்தோம்
திருப்பத்தூரே

(86) ஆகா யிதென்னபார் அதிகவினோதம் வேகுஜோக்கு
அழகதை முன்னேக்கு அநேகவண்டிப்போக்கு-வெகு
அற்புத ஆஸ்பத்திரி அரிசிமில் கட்டிடத்தைநீக்கு

(87) அழகிய உல்லாசமான ரிஜிஸ்தராபீசு
அடுத்துப்போலீசு அரிவையே சபாசு-நேர்
அய்யாத்துரையம்பல முன்சீபுகச்சேரி தமாசு.

(88) பூவையரே புதுமார்க்கட்டுக் கட்டிடம்பாரு
பலவஸ்துக்கள்தேரு பார்த்துக்களிகூரு-அதைப்
போக்கியே தாலூகா கச்சேரியலங்கிர்தஞ்சீரு

(89) சருவசனப்புளக்கந்தங்குங் கடைத்தெருக்களழகு
ஜனநெருக்கம்விலகு ஜட்காவண்டி யொழுகு-அதைச்
சார்ந்த பீருராவுத்தர் கடைகளொரு சாரியேபழகு

(90) திருப்பத்தூரில் வாழும் சேகிபுருகி புத்திரனுமே
பீருராவுத்தர்தாமே பேர்மகிமையாமே-அவர்
சேருமனைக்கழைத்துச் செய்யும் விருந்தருந்துவோமே

(91) உண்டு பசிகளாறிக்கொண்டு பாக்கிலைகளருந்து
பொற்புடனேயிருந்திப் போதுமகிழ்பொருந்தி-மிக
உல்லாசவண்டியேறு சல்லாபமாதே மனந்திருந்தி

(92) மங்கையரேவாராய் ம. கு. கடைச்சயிட்டு
மனைகளெங்கும் ரயிட்டு வசிக்குஞ்சனத்திரட்டு- இள
மானே த. செ. நா. சாப்புக்கடை பசுட்டு

(93) ஜொலிக்குந் தெருவினிலே விளக்கின் புதுமையைப்
பார்சேடி.
அய்ந்துமொன்ருய்க்கூடி அழகுதரும்வாடி-இங்கு
தொத்தன் செட்டிமளிகை தாண்டு வழியதனைநாடி

(94) துதிப்புடன் தீனோர்கள் மதிப்பாய்த் தொழுங்கொத்துபா
பள்ளி
காணுதுபார்வெள்ளி கதவுரத்னப்புள்ளி-இந்த
சுற்றுத்திருமதிலின் முத்துச்சாந்தொளி தருந்தெள்ளி

(95) காரிகையே முன்னால் சீதேனி தெப்பக்குளங்கண்டு
கனத்தமகிழ் கொண்டு கன்னியே நீருண்டு-ஒலி
கான்முகம்மது சாய்பு கபுருஸ்தான் பள்ளிமுன்னாள்
நின்று

(96) பாத்திஹாவோதியே பாதையிற் புதுப்பட்டிநீட்டு
சுங்கமிதுகேட்டு சுருக்காய்வாங்குசீட்டு-எந்தன்
பாவையே நெடுமரத்தாறுகடந்து முன்னால்ரேட்டு

(97) சிங்காரமாதேவா சிவப்பட்டிக்காடுகளைமீட்டு
பிள்ளைமங்கலக்கேட்டு பேர்கொடுத்துச்சீட்டு-வாங்கி
தீவிரமாகவே யேகுதுபார் வண்டிரேட்டு

(98) காரணராமெங்கள் காட்டுபாவா பள்ளி நேராய்
வாசமிகு சீராய் மணருக்கள் பாராய்-எந்தன்
கன்னியரே ஒலிதருகாவந்தோம் புதுமைதேராய்

(99) பாவையே எண்கோணத் தெப்பக்குளமிதுவே பாரே
தோப்பழகுசீரே தோகைகண்டு தேரே-கூவும்
பட்சிஅனந்தமிதில் மிக்க அழகு தரும்நேரே

(100) திகழுஞ்சலவைக்கல்லே வரிசைமண்டபத்தினில் பதித்து
சித்திரவேலே புதித்து சிங்காரமிகமதித்து-எங்கும்
செப்பனிட்டதின்மேலே அற்புதரத்தினங்கள் பதித்து

(101) தோகையே ஜாலர்வேலே தோன்றுமணருவில் நிறுத்தி
பொற்கலசம் பொருத்தி பூங்கொடிகள்திருத்தி-ஜெக
ஜோதிக்கதவுநிலே நேரேசொலிக்குதுபார் விருத்தி

(102) பாரமலேக்கள்ளர்கள் நாதரென்றறியா மற்றடுக்க
கள்ளர்கண்ணேக்கெடுக்க கண்வெளிச்சங்கொடுக்க-எழு
பார்ப்பாரப்பெண்களேக்காத்து ரெட்சித்த நாதரடுக்க

(103) சந்தித்தமேசகிவந்தனஞ் செய்குவாய் வாழ்த்தி
சாய்பொலியையேற்றி சருவஜனம்போற்றி-நாம்
சந்தோஷமாய்த் துவாசாற்றிஞேமே வெகுநேர்த்தி

(104) போற்றுங்கந்தூரி நல்லூர் நாட்டிற்சந்தோஷத்துடன்
கொடுத்து
போர்வைப் பெட்டியெடுத்துபுண்ணிய நாதரடுத்து-வர
பொங்கும் நீர்க்குடங்க ளெங்கும் வார்த்து நிற்பார்
தொடுத்து

(105) வள்ளலவுலியாமேற் கள்ளர்கள் பயபக்தியோடு
புஷ்பரதக்கூடு புனேந்து வெளிப்பாடு -வரும்
வடிவழகினேச் சொல்லமுடியுமோ யிதற்கில்லே யீடு

(106) சந்தனக்கூடெழுந்து விந்தையாய்வரும் பிரகாசம்
சந்திரவிலாசம் சருவஜனவாசம் -எங்கும்
ஜாரிஜாரியாக ஓடிவருவோரதிநேசம்

(107) தம்பூருமத்தளங் கொம்பு புல்லாங்குழற்சத்தம்
அதிருதடிசித்தம் அஞ்சுதடிநித்தம்-இந்தச்
சந்தனக்கூட்டிலிசைந்திடும் வேலேகள் சுத்தம்

(108) ஆகாயவாணங்கள் அவிட்டுமத்தாப்புகள் நேராய்
அந்தரத்தில்ஜோராய் அலறிவருந்தேராய்-வெகு
அந்தணக்கன்னியர்க ளடிக்குங்கோலாட்டமிதுபாராய்

(109) பந்திபந்தியாகப் பக்கீர்கள்கூட்டங்கள் யேகம்
[1]தாயிரு அடிவேகம் ஜனங்களுமனேகம்-மிகு
பகவத்தியுடன்கூடு பவனிவருகிற வைபோகம்

(110) பவனியும் வருகுது அவுலியாகூடு ஜனத்தோடு
மிகுவழகுநாடு வெகுஜனம்பேயாடு-இந்த
பாரில் தருகாமுன்னிறக் குருர் சந்தனக்கூடு

(111) பந்தஞ்சிலம்பு கோலாட்டு வேடிக்கைகள் பெருக்கம்
ஜனங்கள் மிகுநெருக்கம் தவிர்த்து மனமறுக்கம்-நாம்
பரிமளக்கூடுபார்த்து ஏகுவோமிருப்பிடம் சுருக்கம்

(112) கோதையே கோரைமலைக் கேகித்தெரிசினையே பாராய்
காரணங்கள்நேராய் கண்டுமனந்தேராய்-நாம்
கூடித்திரும்பிவழி யேகிநடந்திடலாம் வாராய்

(113) கன்னியே தருகாவில் கந்தூரிசெய் மனந்திடத்து
காணிக்கைகள் நடத்து கவலைதனைக்கடத்து-எந்தன்
காரிழையேபசியாறி வருவாய்செல்லுமிடத்து:

---

1 தாயிரு-மேளம், கொட்டு

முற்றிற்று

## நாகைப் பத்து

(1) திருதூங்கு சயில புயமோங்கு மரசர்தின வந்திறைஞ்ச
மௌன
குருதூங்கு பொதிகை வரையுற்ற முனிவர் கோதாய்
நினைத்துவுணவை
தருதூங்கு [1]கிஸ்தியா லீய்ந்து தீங்குதனை மாற்றி வந்த
கமல
மருதூங்கு சரண ஷாகுல் ஹமீது வரவேண்டு மென்ற
னருகே.

(2) அணியான சோதி முதலோனிடத்தி லருளாகி [2]கிந்திலாகி
பணியான தரள வடிவாகி பச்சை மயிலா யிருந்து பாரில்
பிணியான மாந்தரீ டேறவந்த பெருமான் குலத்தி
லென்கண்
மணியான வள்ளல் ஷாகுல் ஹமீது வரவேண்டு மென்ற
னருகே.

(3) வனமீது லாவுமான் வேடன் வலையில் மருகின்ற வாறு
போல
தினமிந்த கொடிய நோயா லிடைந்து சித்தாகுலங்க
ளுற்றேன்
தனமீந் தொருத்தி மகிழ்வேற நாகை தழையப் புரந்த
ராசர்
மனமீதி ரங்கி ஷாகுல் ஹமீது வரவேண்டு மென்றனருகே.

(4) கதிகொண்ட வனைகளுகு நித்திலத்தை கவை காலிடிக்கி
மகிடங்
குதிகொண்ட கன்றதெரு மீதுலாவி கொழுமுத்து திர்க்கு
மதின
பதிகொண்ட ராஜர்மகு மூதுக்காக பயல் செய்த பிழை
பொறுத்து
மதிகொண்ட நாகை ஷாகுல் ஹமீது வரவேண்டு மென்ற
னருகே.

(5) பகராத வூமை செவிடா திகுருடு பல சூனியங்கள் பில்லி
நிகரான வாத முதலான நோய்கள் நீருகி யோடல் கண்டு
ஜெகராசர் போற்ற தவராசர் முடியில் திகழ்கின்ற சரண
முதவ
மகராச ரெங்கள் ஷாகுல் ஹமீது வரவேண்டு மென்ற
னருகே.

---

1 கிஸ்தியா-நீதி சமமாக 2 கிந்தில்-விளக்கு

(6) தாய்நட்பி லாதசே யொத்து நோயின் சலதிக்குள்
மூழ்கு மற்ப
நாய்நற்ற வங்கள றியாமல் வீணே நாளே கழித்த
கொடிய
பேய்முன் புரிந்த பிழையே பொறுத்து பிரியத்தோ
டாய்ந்து புகழும்
வாய்சொற் கிரங்கி ஷாகுல் ஹமீது வரவேண்டு மென்ற
னருகே.

(7) காயத்திலுற்ற பிணியால் வருந்தி கவலைக்குளாகி
விடுமுன்
சீயத்தையொ த்தவிசை யோடெழுந்து சிறியோன்
பவங்கள் பொடிய
தேயத்தில்மிக் கவளமேறு தஞ்சை செல்வர்க் கிரங்கி
கொடிய
மாயத்தையோ ட்டும் ஷாகுல் ஹமீது வரவேண்டு
மென்ற னருகே.

(8) கோவேந்தர் போற்று பகுதாதி நாதர் குலமீதுதித்து
மதுர
பாவேந்தர் கொடிய வினைபாவ மிருளை பருகின்ற
பருதி நிகராய்
க்ாவேறு நாகை நகரைப்புரக்கு காருண்யரே யிரங்கி
மாவேக மாகஷாகுல்ஹமீது வரவேண்டு மென்றனருகே.

(9) தேமேவு கஞ்சமதிலேறி வினைகள் திகழ்முத்து
திர்க்குமாவிக்
காமேவு மாணிக்கப்பூர் புறந்த கர்த்தக் குகந்த சுதராய்
கூமேவு மக்கமுதூர் புகுந்து குவியேழு ஹஜ்ஜு செய்த
மாமேவு நாகை ஷாகுல் ஹமீது வரவேண்டு மென்ற
னருகே.

(10) வில்லோடு பாண மதுபாய்ந்த மானின் மெய்போ
னடுங்கி நோயால்
நல்லோர் முனேக மனநாணியுங்கள் நட்பாத
நம்புமென்னை
புல்லோர் நகைத்து இகழாது பிணிகள் பொடியக்
கண்ணேக்குவேத
வல்லோர் கள்போற்று ஷாகுல் ஹமீது வரவேண்டு
மென்ற னருகே.

நாகைப்பத்து முற்றிற்று.

ஆமீன்! ஆமீன்!! யாரப்பில் ஆலமீன்!!!

## நாகைக் கொச்சகம்

(1) சீர்கொண்ட நத்தமதிற் சென்றேறியே கொடிய
பேர்கொண்ட வுக்ரபிசா சினத்தைத் தானழித்து
தார்கொண்ட ஞானத் தவராஜரே யெழிலில்
கார்கொண்ட நாகை ஹமீதொலி யென்னுயகமே

(2) முத்திக் குருவாய் முஹம்மதுற் றசூல்மரபில்
சித்திபெற வந்துதித்த செய்யி தசன்குத்தூசு
புத்திரராய் வந்தமணி பொக்கிஷமே நாகைநகர்
கத்தரே ஷாகுல் ஹமீதொலி யென்னுயகமே

(3) அம்மன் கடல்சூ ழவனியிலும் போர்துதித்தும்
விம்மிக் கொடுநோயால் மேனிமெலிந் தேங்குவனே
தம்மினத்தோ டுற்றொரு நாள் சரணந் துதித்தமதிக்
கம்மிய நோய்தீர்த்த ஹமீதொலி யென்னுயகமே

(4) மண்ணூரும் பூவுலகில் வன்நோயினு லிடைந்து
புண்ணுலி யாகிப் புலம்பிநிதம் வாடுவனே
தண்ணருஞ் செங்கமலத் தாளுதவி யேகருணைக்
கண்ணுலே பாரும் ஹமீதொலி யென்னுயகமே

(5) கொடிதாங்கும் நாகைநகர் [1]குதுபே யெழுவானம்
படிதாங்கும் வீரம் படைத்து மெளி யோனுடைய
குடிதாங்குதல் பெரிதோ குற்றம் பொறுத்தாளும்
கடிதாங்கும் குங்குமத்தார் ஹமீதொலி யென்னுயகமே.

---

1 குதுபே-இறைநேசரே

நாகைக் கொச்சகம் முற்றிற்று.

## நாகைத் திருவாசகம்

(1) சீராரும் நாகை நகராளுங் கோவை
தித்திக்குந் தெள்ளமுதைத் தேனைப்பாகை
காராருஞ் செங்கர நாயகத்தைப் பாவை
கணிக்க வரங் கொடுத்த கற்பகத்தைக் கண்ணை
பேராருங்[1] குறசிவங்கிடக் கடற்குள்
பிறந்தவலம் புரிமணியைத் [2]திருமாணிக்கப்
பூராறுமசன் குத்தூசருள் ஹமீதை
போற்ருமல் வீண்பொழுது போக்கினேனே

(2) முத்தமிழ்க்குப் படிகொடுக்கு முதலைக் காலை
முளைத்த செழுங் கதிரைப் பாவலர் நாவை
குத்தமில்லாக் குணக்கடலை விசால மான
குவலயத்தின் ருெடரிருளை யறுத்த கோவை
சுத்தமிகுங்கதிர் பவளமலை யுச்சத்தில்
தோன்றுமணி தீபத்தை விபுத ருண்ணும்
புத்தமுதைத் திருநாகை மீருன் சாய்பைப்
போற்ருமல் வீண்பொழுது போக்கினேனே.

(3) தேவு[3]சின் பூதமடி பணியுந் தேவை
தேடரிய திரவியத்தைச் செம்பொற் குன்றை
காவுலவும் பகுதாது நகரைக் காக்கும்
கடவுள்கால் வழியுதித்த வேந்தைச் சேடன்
நாவுகொண்ட புகழ்க் கடங்காப் பொருளைச்சீத
நாமறையின் ரகசியத்தை நறுவூடாடும்
பூவுலவுந் தருநாகை மீருன் சாய்பைப்
போற்ருமல் வீண்பொழுது போக்கினேனே.

(4) காண்டகாத் திருவடியை முச்சகத்தின்
கர்த்தரைக் காரண சற்குருவை நித்த
வேண்டியவர்க் கருள் புரியு மேகந்தன்னை
வேதாந்தத் துட்கருவை யமரர் போற்று
ஆண்டகையை யடியார்கள் பிணியைத் தீர்க்கும்
அருமருந்தை மெஞ்ஞானப் பெருக்கை நீதம்
பூண்ட மீரான்சாய்பு செம்பொற் பாதம்
போற்ருமல் வீண்பொழுது போக்கினேனே.

---

1 குறசிவங்கிடம்-குறைஷி குலம்

2 திருமாணிக்கப்பூர்-பகுதாது நகர்

3 சின்-ஜின்கள்

(5) காரண மாயுதித்த செழுங் கரும்பை வானர்
கண்டெடுத்த புதையல்தனைக் கருத வொண்ணு
தாரணியோர் புகழ்ந்தேற்று மொலிமார்க்கெல்லாந்
தனியரசை மெஞ்ஞானத் தவத்திலோங்கி
ஆரணத்தின் வடிவான செய்கு யூசுப்
அண்ணல்மகிழ் தந்தையரை வுயிர்கள் தோறும்
பூரணமாய் நிறைந்தவெங்கள் மீரான் சாய்பை
போற்றுமல் வீண்பொழுது போக்கினேனே.

நாகைத் திருவாசகம் முற்றிற்று.

நாகைமா நகரம் புக்கி நாயகப் பொருளைப் போற்றி
வாகைசேர் காரைக்கால் மஸ்தானொலி பதமு வாழ்த்தி
பாகைசேர் திருச்சிறுப்பள்ளி பதிநஃத ஞெலியையு நாம்
ஓகையாய்ப்புகழ்ந்தோம் செல்வ முயர்தவ வழிகண் டோமே.

ஆமீன் ! ஆமீன் !! யாரப்பில் ஆலமீன் !!!

## இரங்கோன் நாகூர் கந்தூரிப் பாட்டு

(போ. நா. சீனி முஹம்மதுப் பாவலர் அவர்கள் பாடியது)

### பல்லவி

பாரடி கந்தூரி அன்னமே ரெங்கோன்
பதினலாங் கடை ரோட்டு முன்னமே—அங்கு
வேடிக்கை ரொம்ப அனேகமே—நல்ல
விநோதத்தைப் பாரடி சொர்ணமே.

### அநுபல்லவி

பாரடி கந்தூரி பதினலாங் கடை ரோட்டில்
பருவதம் போலே மினரா உயரத்தை
கோரடி சாகுல் ஹமீதொலி பாதத்தைக்
கொடுநோய் பிணி யெல்லாம் பனி போலே நீக்குவார். [பாரடி]

### சரணம்

(1) அஞ்சு மினராவை வஞ்சியே பாரடி
அழகு நின்று உலாவுது—மிக
அணியணியாகவே சித்திரத்தின் மேலே
அன்னங்கள் நின்றுமே கூவுது
மஞ்சுலாப் பள்ளியைக் கொஞ்சியே பாரடி
மக்கமா நகரம் போல் தோணுது—நல்ல
மாணிக்கத்தாலே சமைத்த விளக்குகள்
மதிவந் திருந்தாற் போல் காணுது.
செஞ்சுடர் வீசும் சித்திர விளக்கையும்
சீமை லண்டனிலுள்ள செடி விளக்கையும்
பஞ்சலோகத்தாலே செய்த விளக்கையும்
பச்சை மரகதக் [1]குளோப்பர் விளக்கையும் [பாரடி]

(2) ஓங்கி வளர்ந்த கொடி மரத்தைப்பாரு
உச்சியில் தங்கக் கலசம்—மிகு
ஒளி பொருந்திய பஞ்சவர்ணக் கொடி
உலாவுகின்றது உல்லாசம்
மூங்கில் கழையினல் பந்தல்களைப் பாரு
மூன்று பனைப்பிரகாசம்—அதில்
[2]முராதியா பக்கீர்கள் சடை விரித்தாடுகிறர்
முழக்கம் ரொம்ப விசேஷம்.

---

1 குளோப்பர் விளக்கு-உருண்டையான கண்ணடி விளக்கு

2 முராதியா-இரப்பவர்

[1]வங்கத்தைப் பாரடி சிங்காரமான
வகையுள்ள [2]கப்பித்தான் மாலிமையும் பாரு
சிங்காரமான சிவிகையையும் பாரு
சின்னரதத்துட சோடனையும் பாரு.

(3) கந்தங் கஸ்தூரி விற்கும் கடையைப்பார்
கன்னிகையே வெகு சோக்கு
கடலை பொரி உருண்டை அவல்கள் விற்கிற
கடையைப் பார் ரொம்பத் தூக்கு
சந்தனங் கெந்தவடி சவ்வாது விற்கிறார்
தையலே வாங்கி நீ பூசு—இன்னும்
சாம்பிராணி ஊதுபத்தி கையினில் ஏந்தியே
சத்தங்கள் போடுறார் கோசு.

துந்துபி மல்லாரி டங்கா முழங்குது
திடு திடு திடுவென மேளங் கடாவுது
பந்து பந்தாகவே வானங் கிளம்புது
பறையர் மத்தாளமும் காதைத் துளைக்குது [பாரடி]

(4) அல்லாஹ்வை ஒருவனை அஞ்சி வணங்கியே
[3]ஆமீன் கூறுறார் பாரு
[4]ஆலிம்கள் கூடி [5]மவுலூது ஓதுறார்
அன்னமே நேர்த்தியா நீ கூறு
கல்லாச்சாமி நல்லசாமி யென்றே பிருமர்
காணிக்கை போடுறார் நேரு—அங்கே
காதரு சாய்பொலி மேலே கவி வாணர்
கவிதைகள் பாடுறார் ஜோரு

---

1 வங்கம்-கப்பல்

2 கப்பித்தான்-கேப்டன் (Captain)

3 ஆமீன்-பிரார்த்தனையை ஏற்றுக்கொள்ளும் பொருட்டு சொல்லும் வார்த்தை

4 ஆலிம்-சமய அறிஞர்

5 மவுலூது-பிறப்புக் கதை

மல்யுத்தக் காரரின் குஸ்தி வேடிக்கையும்
மட வாலிபர்கள் வைந்தான் வேடிக்கையும்
சில்லடிக் கம்பு சிலம்பன் வேடிக்கையும்
சீனி முஹம்மது பாடுங் கவிதையும் [பாரடி]

(5) சந்தனக் கூடு சோடனை யைப்பாரு
சந்திரன் வந்திருந்தாற் போலே
சாதித் துரைமார்கள் வேடிக்கை பார்க்கிறார்
தையலே உந்தன் முன்னாலே
மல்லிகை முல்லை மருமலர் சூடியே
மெல்லியர் வாரார் பின்னாலே—அவர்
ஆசைக் கணவர்கள் வழி நடத்திக் கொண்டு
அருகில் வருவதைப் பாரு

மானில முழுதுமுள்ள மக்களையும் பாரு
மட்டிலடங்காத வேடிக்கையைப் பாரு
சீன வங்காளியர் சுற்றுகின்றார் பாரு
தேசங்கள் காட்டுகிறார் கண்ணாடிக்குள் பாரு. [பாரடி]

(6) கூடுகிளம்பிக் கிழக்கே போகுது
கூஞ்சான் ரோட்டு முனையில்—அது
குறுக்கே திரும்பித் தெற்கே போகுது
கோலப்புத்துகான் வளைவில்—அதில்
ஆடுங்குடங்கள் அசைந்தே ஆடுது
அழகான பூச்செடிக் கிளையில்—அடி
அன்னமே வாரியா முன்னாலே போகலாம்
அடுத்த ரோட்டு முனையில்

காக்காப் பொன்னுகள் [1]பகவத்தி மின்னுது
கண்கள் ரெண்டும் கூசியே நிற்குது
மூடுகாடிகள் முன்னாலே போகுது
மேற்கே கூண்டு திரும்பிச் செல்லுது. [பாரடி]

[1] பகவத்தி-ஊதுபத்தி

# முகவுரை.

நெல்-ஊகை என்ற இவ்வியாசங்களை ஸ்ரீமத் அப்துல் காதிறு ராவுத்தரவர்கள், "செந்தமிழில்" வெளியிடும்படி எனக் கனுப்பியபோது அவை பல அரிய விஷயங்களை மிகவினிய நடையில் விளக்குவதுகண்டு, பெரிதும் ஆனந்தமடைந்தேன். அப்போது அவற்றைத் தனிப் பிரசுரங்களாக வெளியிட்டுத் தமிழகத்திற் பரவச்செய்வது நலமென்று என்னைப் போலவே நண்பர் சிலருங் கருதியதுண்டு. அக்கருத்து, இராவுத்தரவர் கட்கும் உதித்து, என்னைச் சிறுமுகவுரை ஒன்றெழுதித் தனிப் பதிப்பாக அச்சிட்டுத்தரும்படி கேட்டுக்கொண்டார்கள்.

யான் அவர்கள் விருப்பிற்கு உண்மையில் மகிழ்கின்றேனா யினும், யானெழுதுமுகவுரை, இவ்வியாசங்களின் இயற்கைச் சிறப்பை எம்மட்டில் அலங்கரிக்கக்கூடுமோ தெரிந்திலேன். செந்தமிழ் மூலம் முன்பு வெளிவந்தபோது, இவை தக்க அறி ஞர்களாற் பலமுறை படித்துச் சுவைக்கப் பெற்றவையாதலால் என்னெழுத்து இதற்கொரு சிறப்பைக் கொடுக்கக்கூடுமாயின் அஃது எனக்குப் பெரு மகிழ்ச்சியே.

இராவுத்தரவர்கள் எழுதிய இவ்விரண்டு விஷயங்களிலே, நெல் என்பது, மதுரை ஜில்லா விவசாய சங்கத்தாரால் திறக் கப்பட்ட கால்நடைக்காட்சி, வருஷோற்சவக் கூட்டத்தில், டிஸ்டிரிக் மாஜிஸ்டிரேட் மிஸ்டர் J. F. பிரையண்டுதுரை யவர்கள் அக்ராசனத்தின் கீழ் வாசிக்கப்பெற்றது. இதனில் மக்கட்கின்றியமையாத நெற்பயிர் வளர்ச்சிக்கு உரிய உபாயங் களெல்லாம் விவசாய ஆராய்ச்சிவன்மையால், சுருங்க விளங்க விளக்கப்பட்டுள்ளன; ஆதலின், நம் நாட்டார் இன்றியமை யாது கற்றற்குரிய விஷயங்களில் இது முக்கியமென்னத் தடை யில்லை. இராவுத்தரவர்களது, விவசாய ஆராய்ச்சி வன்மை பற்றியே, மதுரை விவசாய சங்கத்தின் முக்கிய அங்கத்தின ராக அவர் விளங்குவாராயினர். இவ்வியாசம் சபையிற் படிக்கப் பெற்றபோது கலெக்டர் துரையவர்கள் இதனருமை பெருமை களையறிந்து வியந்து கூறியதோடு, அக்கூட்டத்து விளங்கிய ராவ் பகதூர் கனம் ஜி. ஸ்ரீநிவாசராவ் அவர்கள் ஸ்ரீமத்சுப்பராயரவர்கள் முதலிய கனவான்களும் பெரிதும்

அருமை பாராட்டி மகிழ்ந்தனரென்றால், இதற்கு வேறு சிறப்புங் கூறவேண்டுமோ? இனி, ஈகையெனப் பெயரிய மற்றை வியாசம், மதுரைத் தமிழ்ச்சங்கத்து எட்டாம் வருஷோற்சவ காலத்து அதன் அக்கிராசனாதிபதி ஸ்ரீமாந்-பாண்டித்துரைத்தேவரவர்கள் முன்னிலையிற் படிக்கப் பெற்றதாம். இஃது, ஈகைச் சிறப்பைப் பலவகையாகப் பகுத்துக்கொண்டு,எண்ணிறந்த பழைய பிரமாணங்களுடனும்சிறந்த இதிகாசங்களுடன் விளங்குவது. சுருங்கக் கூறுமிடத்து, இவ்விரண்டு வியாசங்களும் நம்மவர் பெரிதும் விரும்பிப் படிக்கத் தக்கவையாதலால், இராவுத்தரவர்களது நன் முயற்சி தக்க பயனையளிக்கத் தடையில்லை யெனலாம்.

பொது ஜனங்களது நன்மையே குறிக்கொண்டு, தாம் மேற்கொண்டுள்ள பற்பல உத்யோகங்களினிடையே, இத்தகைய அரிய வியாசங்களானும் உபகரிக்க ராவுத்தரவர்கள் முயன்று வருவது, ஜனோபகாரத்தில், அவர்கட்குள்ள மிக்க ஊக்கத்தைக் காட்டுகின்றது. இராவுத்தரவர்கள், தமிழ்ப் புலமை மிக்குடையவர்களாயிருத்தலேயன்றித் தமிழ் வளர்ச்சியிலும் பெருநோக்குடையவரென்பதற்கு, தம்மூரில், மகமதியரது தமிழபிவிருத்தி கருதித் தமிழ்ச் சங்கமொன்று ஸ்தாபித்து ஊக்கத்துடன் அதனை நடத்தி வருதலே தக்க சான்றாகும். இத்தகைய உபகாரங்கட்குத் தமிழகம் இவர்கட்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளதாம். இவ்வாறே ஆராய்ச்சி விஷயங்கள் இன்னும் பற்பல எழுதித் தமிழ் மக்கட்குபகரிக்கும்படியான அறிவாற்றல்களை இராவுத்தரவர்கட்கு அளிக்கும்படி, ஆண்டவன் திருவருளை அனவரதமும் சிந்திக்கின்றேன்.

**மு. இராகவையங்கார்,**
பத்திராசிரியர்.

---

'நெல்' எனும் இக்கட்டுரை மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடான 'செந்தமிழ்' இதழில் 1909-ஆம் ஆண்டு சூலை மாதத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இக்கட்டுரையோடு ஈகை என்ற கட்டுரையினையும் சேர்த்துப் பின்னர் நூலாக வெளியிட்டபோது செந்தமிழ் இதழாசிரியர் அறிஞர் மு, இராகவையங்கார் அவர்கள் அந்நூலுக்கு எழுதிய முகவுரை இது.

# நெல்.

பொது:— இவ்வுலகை ரக்ஷிப்பது தான்ய வகைகளே. தான்ய வகைகளில் மிகச்சிறந்ததும் தென்னிந்தியாவில் தொன்றுதொட்டு மிகுதியாக விளைவதும் சரீரபோஷணைக்கு மிகவும் ஏற்றதும் இந்த நெல்லேயாம்.

ஆதியில் நெல் விளைவது இந்தியாவுக்கு மட்டுமே உரிமையாயிருந்தது. பின் இந்தியாவிலிருந்துதான் ஜப்பான், அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இங்கிலாண்டு முதலிய அந்நிய நாடுகட்குப் பரவுவதாயிற்று, ஆயினும் தற்காலம் நம் இந்தியரைப் பார்க்கினும் அவ் அந்நிய நாட்டார் இவ் விஷயத்தில் கண்ணுங்கருத்துமாக உழைத்து மிகத் தேர்ச்சியடைந்துள்ளார்கள். நம் நாட்டாரோ ஊன்றிக்கவனியாமல் மேற்போக்காகவே நெல் சாகுபடி செய்கின்றனர். உழுவதும், விதைப்பதும், களையெடுப்பதும், தண்ணீர் கட்டுவதும், காப்பதுமாகிய இவ்வைந்து வகைத் தொழில்களும் சாதாரணமாகச் செய்து வருகின்றார்களன்றி நன்கு கவனித்துச் செய்வதில்லை.

'' எரினு நன்ரு மெருவிடுதல் கட்டபின்
னீரினு நன்றதன் காப்பு.''

என்ற திருக்குறளுரையில் பரிமேலழகரும் இவ்வைந்து வகைத் தொழிலைக் கூறினர். தமிழ்ப் புராணங்களில் நாட்டு வளங் கூறுமிடத்து மருதநில வருணனையில் நெல் விளைவின் பெருக்கமும் விளைவிக்குந் தன்மையும் பலவாருக எடுத்துக் கூறக் காண்கிறோம்.

பண்டைக்காலத்தில் கால இயல்பாலும் நிலவளத்தாலும்

உழைப்பு வகையாலும் இத்தானியம் மிக வியக்கத்தக்கவாறு நம்நாட்டில் விளைந்து வந்தது. புராணங்களில் நெல் கரும்பைப் போலிருந்ததென்பர். ''நெற்கரும்பெனக் கரும்பெலா நெடுங் கமுகென்ன'' எனவும், ''கரும்பல்ல நெல்லென்ன'' எனவும் வருவனவாம். இதுமட்டோ! சங்க நூல்களில் ஒன்ருன மதுரைக் காஞ்சியில் (247) ''களிறுமாய்க்குங் கதிர்க் கழனி'' என்று கூறுவர். யானைகள் நடுவே வந்தால் அவை மறையும்படி யானையுயர்த்தினும் மிக்குயர்ந்துள்ள நெற்பயிரையுடைய வயல் என்பது இதன் பொருள். இவ்வாறு சிறப்புறப் பரிபாலிக்கப் பட்டு வந்த இந்தத் தானியத்தின் பெருமையோ கடவுளோ டொக்கக் கூறத்தக்கது புறநானூறு (186-வது கவியில்) ''நெல்லு முயிரன்றே நீரு முயிரன்றே'' என்ற விடத்து, ''உயிர்'ாக்குவன நெல்லும் நீரும்'' என்பர் நச்சினார்க் கினியர். இவ்வாறு நம்முன்னோர்களாற் புகழ்ந்து போற்றப் பட்ட நெல் விவசாயத்தைப்பற்றி நன்ருக ஆராய்ந்து நாளுக்கு நாள் அபிவிருத்தியாகச் செய்வது தேசக்ஷேமத்திற்கு இன்றி யமையாத தென்பது எல்லாரும் ஒப்புக்கொள்ள வேண்டிய விஷயமேயாம்.

நெல்வகை:— நம்நாடே நெல்விளைவில் பிரசித்திபெற்ற தாயினும் வகைகள் அதிகப்பட்டிருக்கவில்லை. இவ்வுலகத்தில் தற்போது 1400-வகை நெல் இருப்பதாக விவசாயமுறை நூல்களிற்தேர்ந்த பண்டிதர்கள் எழுதியிருக்கிருர்கள். இலங் கைத்தீவில் 160 வகையும் ஜப்பானில் 580 வகையும் இருக் கின்றனவாம். நம் இராஜதானியில் எங்காவது ஓரிடத்தில் எல்லா வகை நெல்களையும் சேர்த்துவைத்து அந்தந்த நெல்லினையும் முறைகளையும் எழுதி வெளியிட்டால் மிகவும் அனுகூலமாயிருக் கும். தஞ்சை ஜில்லா விவசாய சங்கத்தார் நம் சென்னை ராஜ தானியிற் கிடைத்த 163வகை நெல் சேர்த்து வைத்திருப்ப தாகத் தெரிகிறது. ரோமபுரிப் பொருட்காட்சிச்சாலையில் பல தேசங்களிலிருந்து தருவித்த 347 வகை நெல் இருப்பதாக அறிகிரேம்.

பெயர்வகை:— இதன் பெயர் பெரும்பாலும் காரணம் பற்றி வந்தனவேயாம். சிறுபான்மை இடுகுறியாகவுமிருக்கின்

றன. பெயர்கள் சில வருமாறு.

| குறுவை. | சம்பா. |
|---|---|
| அறுபதாங்குறுவை | வெற்றிலைச்சம்பா |
| கருங்குறுவை | பக்கிரிச்சம்பா |
| செங்குறுவை | சிவப்புச்சம்பா |
| வாற்குறுவை | கம்பன்சம்பா |
| கோணக்குறுவை | வாசனைச்சம்பா |
| மொட்டைக்குறுவை | மல்லிச்சம்பா |
| அன்னதானக்குறுவை | சின்னச்சம்பா |
| | கிச்சிலிச்சம்பா |
| **கார்.** | ஈர்க்கஞ்சம்பா |
| | சீரகச்சம்பா |
| செங்கார் | கட்டைச்சம்பா |
| கருங்கார் | முத்துச்சம்பா |
| மணற்கார் | பனிக்காட்டுச்சம்பா |
| கருத்தக்கார் | கொத்துமல்லிச்சம்பா |
| சண்டிக்கார் | பொன்கம்பிச்சம்பா |
| சிறுமணியன் | கருடன்சம்பா |
| மிளகி | மிளகுசம்பா |
| பெருநெல் | சடைச்சம்பா |
| செம்பாளை | கைவிரிச்சம்பா |
| குத்தாளை | தங்கச்சம்பா |
| காட்டுக்குத்தாளை | வாடஞ்சம்பா |

முதலிய பல பெயருண்டு.

நிலம்:— நெல் விளைவுக்குரிய நிலம், நீர் வளமிக்க மருத நிலமேயென்பது நம் முன்னோர் கொள்கை. தற்கால அனுப வத்திலே இன்ன நிலந்தான் நெற்பயிருக்கு ஏற்றதென்று ஒரு வரையறை செய்யக்கூடாததாயிருக்கிறது. எல்லா நிலங்களி லும் நெல் சாகுபடியாகின்றது. ஜலமும் உரமும் இருந்தாற் போதும். களரிலும் விளைவிக்கலாம், கல் நிறைந்த தரையிலும் விளைவிக்கலாம். நெற்பயிரின் வேர் வெகு நுட்பமானது.

ஆதலால் அவ்வேர் மண்ணுக்குள் தாராளமாகப் படரும்படி மண் நயமாயிருக்க வேண்டும். அஃதாவது இளக்கமுள்ளதாக வேண்டும். கடினப்பட்டிருந்தால் வேர் அதனையூடுருவிச் செல்லாதாகையால் வளர்ச்சியும் பலமும் குறையும். குறுவை, சண்டிக்கார், சடைச்சம்பா முதலியன முத்துப்பேட்டை வகையருவிடங்களில் களரான நிலத்தில் நன்ருக விளைகின்றன. நம் மதுரை ஜில்லாவின் பல பாகங்களில் களரான நிலத்தில் வெள்ளைக்கட்டை, உவருண்டான் முதலிய வகை நெல் விளைகின்றன. ''உவருண்டான்'' என்ற பெயரே அது உவர் நிலத்தில் விளைவதென்பதைக் காட்டுகின்றதல்லவா? ''எந்நாளு முவர்நிலத்தி னென்முளைவித் திடினும்விளை வெய்திடாது'' என்பார் வில்லிபுத்தூரார். இவர் விளைவெய் திடாதென்றது சம்பா முதலிய விலையுயர்ந்த நெல்லைக் குறிப்பிடுங்காற் பொருந்துமேயன்றி உவருண்டான் முதலிய நெல்லைக் குறிப்பிட்டால் பொருத்தமுருது.

**மழை:**— ''மழையின்றி மாநிலத்தார்க்கில்லை'' என்றபடி நெற்பயிருக்கு மழையின் உதவியே முக்கிய ஆதாரம். மற்றப் பயிர்கள் எல்லாவற்றினும் நெற்பயிருக்கு ஜலம் அதிகம் வேண்டும். ஆனதுபற்றியே கிணற்றிறைவைப் புன்செய்களில் பெரும்பாலும் நெல் சாகுபடி செய்யப்படுவதில்லை. காவிரி தாமிரபர்ணி போன்ற ஜீவநதிப் பாய்ச்சலுள்ளவிடங்களில்தான் நெல்விளைவு அதிகம். பல இடங்களில் மழைகாலத்துவரும் ஜலத்தைக் குளங்களிற் கட்டிவைத்து நீர் பாய்ச்சி விளைவிக்கப் படுகிறது. மழை அதிகமாகப் பெய்கிற மலைப்புற நாடுகளிலோ புன்செய்ப் பயிராகவே நெல் விளைகிறது. மலையாளம் இலாகா பாலக்காடு முதலிய இடங்களிலும் இமயமலைச்சாரற் பிரதேசங் களிலும் நெல்லை விதைத்துவிட்டால் பின்பு நீர் பாய்ச்சவேண்டு மென்ற சங்கடமில்லாமல் மழையின் உதவியால் தானே விளைந்துவிடுகிறது. இவ்விடங்களில் உழவர்கட்குச் சங்கடமே யில்லை. நெல் விளைவுக்கு ஆதாரமாகிய மழையே இதன் கெடுதிக்கும் ஆதாரமாகும் விதைத்தவுடன் மழை பெய்தால் விதை நனருய் முளையாது. பூ உண்டாகும் சமயம் மழை பெய் தால் தாது ஜலத்திற்போய்விடும். நெல்மணி திரட்சியின்றிப் பதரே அதிகப்படும கதிரறுக்கும்போது மழை பெய்தால் நெல் உதிர்ந்துபோகும. அறுவடைக்கு ஆளுங்கிடையாது; களம்

சேர்க்கக் கஷ்டமதிகம். ஆகவே வேண்டும்போது பெய்தும் வேண்டாக்கால் பெய்யாமலும் மலையாளம், இமயமலை இப்பக்கங்களில் மழையே நெற்பயிரை ரக்ஷிக்கவேண்டியிருக்கிறது. இதனாலன்றோ, "கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே-யெடுப்பதூஉ மெல்லா மழை" என்றருளினார் செந்நாப்போதார். இக்குறளில், "கெடுப்பதூஉம்" என்பதற்குப் பரிமேல்ழகர், "பூமியின்கண் வாழ்வாரைப் பெய்யாது நின்று கெடுப்பதூஉம்" எனப் பொருள் கூறியுள்ளார். ஆனால் வேண்டும்போது பெய்தும் வேண்டாக்கால் பெய்யாமலும் நின்று உலகை ரட்சிக்கவேண்டியிருக்கிறது. மழையேயாதலின், "கெடுப்பதூஉம்" எனற்கு "பெய்யாது நின்றும், அதிகமாகப் பெய்தும் கெடுப்பதூஉம்" எனப்பொருள் கூறுதலே சிறப்புடைத்தாம்.

**பட்டம்:—** ஒவ்வொரு மாகாணங்களிலும் மழை பெய்யும் பருவ காலத்துக்கேற்ப இன்னகாலந்தான் நெல் விதைப்புக்கு ஏற்றதென்று கொள்வார்கள். நம் நாடுகளில் ஆனி, ஆடி மாதங்களே முதற்றரமான பட்டமாம். ஆவணி மாதம் இரண்டாந்தரமே ஆனி, ஆடி மாதங்களில் நன்றாக உழுது புழுதியாக்கி விதைத்துவிட்டால் ஒரு மாதம்வரை மழையில்லாதிருந்து பிந்திப் பெய்தாலும் முன் விதைத்த நெல் அனைத்தும் முளைத்துவிடும். காலம் தவறிய விதைப்புப் பயன்படாது. இதனாற்றான், "பட்டம் தப்பினால் நட்டம்" என்று பழமொழி வழங்குவதாயிற்று. பயிருக்கு உழவு, உரம், நீர் இவைகளைப் போலவே பட்டமும் அவசியம் வேண்டியதொன்றேயாம். இதன் அருமையுணர்ந்த ஒளவையார் என்ற மூதாட்டியார் "பருவத்தே பயிர்செய்" என்றருளினர்.

**உழவு:—** கிருஷித் தொழிலில் முதன்மையானது உழவு தொழிலேயாம். சரியானபடி உழவு செய்துள்ள நிலம் அதிகப் பலனைக் கொடுக்கும். அநேக இடங்களில் 4 அங்குல ஆழம் உழுதால் போதுமென்று நினைக்கிறார்கள். இது பிசகு. கடப்பை, கர்நூல், பல்லாரி, மைசூர் முதலிய நாடுகளில் குறைந்தது ஆறு அங்குலம் வரை உழுகிறார்கள். இத்தாலி தேசத்திலோ 12 அங்குலம்வரை உழுகிறார்கள். நம் முன்னோர்கள் ஆழமாக உழ வேண்டுமென்று நன்கு தெரிந்திருப்பதை. "அகல உழுவதை ஆழ உழு" என்ற பழமொழியால் நன்கு தெரியலாம். ஆழமாக உழுதால் மண் குழம்பாயிளகியிருக்கும். இத்துடன் எரு முதலிய

உரமும் கலந்திருக்குமானல் மிகவும் சிலாக்கியமே. கடினமான மண் ஆயினும் வருஷாவருஷம் தழையும் உழவும் அதிகப்பட்டால் மிருதுவாகும். மண்மிருதுவானல் நெற்பயிரின் வேர் தாராளமாகச் செல்லும். நீர்வற்றிக்காய்ந்தால் காலத்தும் காய்ச்சலைத் தாங்கும்படி அடியிலுள்ள ஈரம் பயிருக்கு உணவாகும், ஆழமாக உழாத நிலத்தில் அடிமண் கடினமாயிருப்பதால் பயிரின் வேர் அதிக ஆழத்திற்போகாது அப்போது கொஞ்சம் நீர் குறைந்து காய்ச்சல் ஏற்பட்டால் சீக்கிரத்திற் பயிர் கருகிப் போகும். நன்செய் நிலத்திற்கு 8 உழவு வேண்டுமென்கிருர்கள். நன்செய் நிலம் சேருகியிருப்பதால் உழவுக்கு எருமைக் கடாக்களே ஏற்றமென்பார்கள். எருதுகள் பலமுள்ளவையானல் மட்டுமே இவ்வுழவு செவ்வையாக நடக்கும். தூங்கலான மாடுகளைக்கொண்டு உழுவது பயன்படாது. விவசாயிகட்கு உழவுகாலத்திற்ருன் சிரத்தையதிகம் வேண்டும். இதுபற்றியல்லவா, ''உழுகிற காலத்தில் ஊர்வழி போனவன் அறுக்கிற காலத்தில் ஆள் தேடிப் பயனில்லை'' என்று பழமொழி வழங்குவதாயிற்று. நம்மை ஆதரித்துவரும் காருண்ய கவர்ன்மெண்டாரவர்கள் ஏற்படுத்திய அக்கிரிக்கல்ஜ்ஜுரல் (Agricultural) முறையை நன்ருய் அறிந்து ஆங்கிலேயர் கண்டுபிடித்த புதிய ஏர்களால் உழுவது அதிக சிரமமின்றிப் பயனுதவும்.

உரம்:— நிலத்தின் சத்திஞலேயே நெல் விளைகின்றதால் ஒரு தரம் விளைந்த பின்பு அந்நிலத்தின் சத்து குறைகின்றது. ஆனதால் மறுதரம் விளைவதற்கு அந்நிலத்திற் சத்துண்டாகும்படி உரமபோட வேண்டியது மிக அவசியம். நம் நாட்டிற் சாதாரணமாக ஆட்டெரு, மாட்டெரு, கொழிஞ்சி, ஆவிரை முதலிய தழைகள், சாம்பல் முதலியவற்றை உபயோகப்படுத்துகிருேம். இவைகளிலெல்லாம் எருவே மிகச் சிறந்த உரமாகும். மாட்டுத் தொழுவங்களினருகே நாலைந்து அடி பள்ளந்தோண்டித் தினமும் விழுகிற சாணி, குப்பை கூளம், சாம்பல் முதலிய கழிவு பதார்த்தங்களை அப்பள்ளத்தில் போட்டுவர வேண்டும். இவ்வாறுபலமாதம்வரை சேர்ந்தபின் வேண்டும்போதுநன்செய்க்கு உரமாகப்போட அதனுற்சத்து அதிகமுண்டு. ஆடுகிடை மறிப்பது அதன் மூத்திரத்தின் உபயோகத்தைக் கருதியே. ஆட்டு எருவைவிட அதன் மூத்திரமே உபயோகமதிகம் மழை வந்துவிட்டால் தரை சேருகிவிடும். அப்போது கிடைமறித்தால்

முடியாது. உழவுக்குப்பின் கொழுஞ்சி முதலிய பலவகைத் தழைகளையும் வயலில் போட்டு மிதித்துவைக்க வேண்டும். இவைகளெல்லாம் மண்ணின் கடினத்தை நீக்கி இளகச்செய் கின்றதுடன் மண்ணுக்குச் சத்தும் கொடுக்கின்றன. எலும்புத் தூள், பிண்ணாக்கு முதலியனவும் சிரேஷ்டமே.

ஜப்பானியர் சுண்ணும்பை உரமாக உபயோகிப்பதுண்டு. இதுமிகவுங் கெடுதியைத் தரும் நாளடைவில் மண்ணையிறுகச் செய்து விளைவைக் குறைத்துவிடும். நம் நாட்டிலிந்த வழக்க மில்லாததுடன் தழை எரு முதலியவைகளையே உபயோகப் படுத்துவது ஆதிமுதல் வழக்கம். மாங்கனீஸ் சத்து நெல விளைவை ஜப்பானியர் மிக விருத்தி செய்கின்றூர்கள். சீமையில் வண்ணூன் சலவை செய்த கழிவு பதார்த்தங்களை இந்தச் சத்து நெல்லுக்கு உரமாகப் போடுகிறூர்கள். இந்த நூதன உரம் மாங்கனீஸ் ஸல்பேட், மாங்கனீஸ் குளோரைட் இருவித மாகும். இன்னும் அவித்த எலும்பு, எலும்புப்பொடி, எலும்புச் சாம்பல், பொடாஸியம் பாஸ்பரேட் முதலிய பலவும் அவர்கள் உபயோகிக்கிறூர்கள்.

பர்மா, ஜப்பான் இடங்களில் உரம்போடுகிற முறையை நாம் கையாளுவதேயில்லை. அவர்கள் போடும் உரத்தின் பலத் தாற்றூன் புட்டரிசி நெல் என்னும் மிகச்சத்துள்ள நெல் அவ் விடங்களில் விளைகின்றது. அந்த நெல்லரிசி மிகுந்த சத்தைக் கொடுக்கிறது. சென்னையில் ருதுவான பெண்களுக்கு இதை வேகவைத்துக் கொடுத்தால் தேகபலம் அதிகப்படும் என்று பெரும்பாலும் உபயோகிக்கிறூர்கள். நம் நாட்டில் உழுந்தைத் திரித்து மாவாக்கிக் கழிக்கிண்டிப்போடுவார்கள். உரம்போடு வதின் நன்மையறிந்தல்லவா திருவள்ளுவர், ''ஏரினும் நன்றூல் எருவிடுதல்'' என்று கூறியருளினூர்.

விதையும், விதைப்பும்:— ''விரையொன்று போடச் சுரை யொன்று முளைக்குமா'' என்பது பழமொழி. இதனூல் விதை எவ்வளவு சிறந்ததாக இருக்கிறதோ அதற்குத் தக்கபடியே பலனுண்டு. நம் நாட்டில் முதலில் வரும் தலையடி நெல்லையே விதைக்கு எடுத்துக் காயவைப்பது சகசம். ஆயினும் இவ்விஷய மாகக் கவனிக்க வேண்டியன பல விஷயமுண்டு. நல்ல நெல்

லுடன் மட்டை நெல் கலந்து வருவது நிதர்சனமே. இதனால் விலைகுறைந்து நஷ்டமுண்டாகும். இதற்குக் காரணம் நெல்லடிக்குங் களங்கள் விசாலமில்லாததால் பலவகை நெல் ஒன்றோடொன்று கலந்துவிடும் அவ்விதையை விதைப்பதால் கலந்தே வளர்கின்றது. தவிரவும் நல்ல நெல் ஆறு மாதத்தில் விளையும். மட்டை நெல்களே மூன்று மாதமுதல் கதிராகும். இப்படியான கதிர்கள் உதிர்ந்து பூமியில் தங்கி அடுத்த வருஷம் நல்ல நெல்லுடன் கூட முளைக்கும். இக்கெடுதியை நீக்கவே முந்தி முதிர்ந்த கதிர்களைப் பிடுங்கி விடுவதுண்டு. இதற்கு மட்டை பொறுக்கல் என்று பெயர். சில ஜில்லாக்களில் நல்ல நெற்கதிரை விதைக்காகத் தனியே பிடுங்கியெடுத்து வேண்டுமளவு சேர்த்துவைத்து விதைக்கு உபயோகப்படுத்துவார்கள். இப்படிச் சிலவருஷம் செய்தால் மட்டை கலப்பது தொலையும். இவ்வாறு செய்வது முதலிரண்டு மூன்று வருஷங்கட்குச் சிரமமேயாயினும் பின்பு இதனால் லாபம் அதிகமாகும். விலையதிகமாக விற்கலாம். உணவிற்கும் பொருத்தமாம். இவ்வாறு மட்டை நீக்கினும் விதை நெல் மிக முற்றாமல் கொஞ்சம் பசுங்காயாயிருக்கும் போதே அறுத்து இரண்டு மூன்று காய்ச்சல் போட்டும் பதமாக எடுத்து வைக்கவேண்டும் காய்ச்சல் போடுவதில் கவனம் அதிகம் வேண்டும். உமியைப் பிரித்துப் பார்த்தால் அரிசியின் ஒரு பக்கம் பால் சுருங்கியிருக்க வேண்டும். இதற்குப் பால் ஒதுங்கும் பக்குவமென்று பெயர். அதிகமாய்க் காய்ந்தால் அரிசி வெடிப்பாகி முளைக்கும் சக்தியைப் பெறாது. ஈரமாயிருந்தால் மடித்துப்போம். இவ்வாறு மிகக் காயாமலும் ஈரமில்லாமலும் பக்குவம் பார்த்து எடுத்துக் காற்றோட்டமுள்ள இடத்தில் அந்துவிழாதபடி பந்தோபஸ்துச் செய்யவேண்டும்.

*"ஆயிர நெல்லுக்கோரந்து":—* என்றபடி அந்துவிழுமேயானால் நெல் ஒன்றுக்குமுதவாதுபோகும். நெல்லுடன் வேப்பிலையையும் புங்க இலையையும் கலந்து வைத்தால் அந்து வராது. நெல்விதைக் கோட்டையின் மேல் ஒரு கலயத்தில் ஜலம் விட்டு வைத்தால் அந்துமுழுதும் அந்த ஜலத்தில் விழுந்து மடியும். இவ்வாறு பாதுகாத்து வரவேண்டும். அதிகக் கொழுமையான நிலத்திலும் கொழுமையற்ற நிலத்திலும் விளையும் நெல் விதைக்குதவாதென்றும் நடுத்தரமான நிலத்தில் விளையும் நெல்லே விதைக்குபயோகமானதென்றும் ஜப்பானியர் கருதுகின்றனர்.

விதையைக் கவனிப்பது போலவே விதைப்பைப் பற்றிக் கவனிக்க வேண்டியனவும் பலவுண்டு. மிக நெருக்கமில்லாமலும் மிக இடைவெளியின்றியும் விதைக்க வேண்டும். விதையை நனைத்து முளை கிளம்பச் செய்து விதைப்பதுமுண்டு. முளைதோன்றியவுடன் விதைத்துவிட வேண்டும். முளை சற்று அதிகம் வெளிப்பட்டால் எடுப்பதிலும், விதைப்பதிலும் முளை முறிவுபடும். நம் நாடுகளில் கையினாலே விதைப்பதைத் தவிர வேறு கருவிகளால் விதைக்கும் வழக்கத்தைக் காணவில்லை. பெரும்பாலும் நெருக்கமாகவே விதைக்கின்றார்கள். நந்தியா, கர்நூல் முதலியவிடங்களில் ''கொர்று'' என்னுமொருவிதக் கலப்பையால் சால்சாலாக விதைக்கின்றார்கள் ஒரு ஏக்கராவுக்கு 20 படி விதையே போதுமானதாகவிருக்கிறது. கர்நூலில் 6 அங்குலம் சந்துவிட்டு விதைக்கிறார்கள். சீனாவிலோ செடி 1-க்கு 6 அங்குல தூரமும் வரிசை 1-க்கு 13 முதல் 18 அங்குல தூரமுமிருக்கும் செங்கற்பட்டில் இக்கலப்பையால் 4 அங்குல தூரத்தில்விதையிடும்படிசெய்துவைத்திருக்கிறார்கள் நிலத்தை மிகவும் கொழுமைப்படுத்தும் அமெரிக்காவிலோ செடி 1-க்கு 5 அங்குல தூரமும் வரிசை 1க்கு 18 அங்குல தூரமுமிருக்கும்படி விதைக்கிறார்கள். சீனா, ஜப்பான் தேசங்களில் விதையை உப்பு ஜலத்திற்கொட்டி மிதக்கிறவைகளை யெடுத்துவிட்டு அமிழ்ந்த நெல்லையே விதைப்பது எப்போதும் வழக்கம். ஒரு பக்காப்படி ஜலத்துக்கு 10 பலம உப்புவீதங் கலந்து வேணடிய அளவு விதையைபபோட்டு மிதப்பதைத் தள்ளவேண்டுமென்று ரசாயன சாஸ்திர மூலமாகக் கண்டிருக்கிறார்கள். ஜப்பானியர் இவ்வாறு செய்யாமல் விதைப்பதேயில்லை. மேலும் தாய்ச் செடியில் விளைந்த நெல் விதை 1-க்கு 71 கதிர்கள் தோன்றுபபடி கிளைத்ததென்றும், கிளைக்கதிரில் வந்த நடுராசி நெல் விதை 1-க்கு 21 கதிா தோன்றும்படி கிளைத்ததாவும், கணுக்களில் தோன்றிய நெல் விதைக்கு உதவாதென்றும் பதினாறு வருஷய பரீட்சைசெய்து கண்டிருப்பதாக ஜப்பானியா கூறுகின்றனர். நம் நாட்டிலோ இவ்வாருன பரீட்சையாராய்ச்சியே கிடையாது. நாமும் நம் நாட்டின் சீதோஷ்ணம் முதலியவற்றைக் கவனித்து விவசாய விஷயமான ஆராய்ச்சியும், பரீட்சையும் செய்ய வேண்டியது மிக முக்கியம். எந்த வர்த்தகமும் விவசாயத்துக்கு ஈடாகாது வர்த்தகத்தில் ஒன்றுக்குக்கால்

அரை யதிகம் கிடைப்பது துர்லபம். அதிகமாகக்கண்டால் ஒன்றுக்கு இரண்டு பங்குகூடக் கிடையாது. ''ஒன்றிரண்டாம் வாணிகமில்'' என்பது நம்மவர் கொள்கை. நெல் வியவசாயத்திலோ இவ்விஷயம் மிகவும் வியக்கத்தக்க தாயிருக்கிறது. அமெரிக்காவில் ஒரு நெற்கதிரில் 160 நெல் இருக்கின்றன எந்தத் தொழிலிலும் ஒன்றுக்கு 160 பங்கு இலாபம் காண்பது அரிதேயென்று சொல்லவும் வேண்டுமோ?

*நாற்றும், நடுகையும்:—* கைவிதைப்பாக விதைததுப் பயிராக்குவதிலும் நாற்று வளர்த்து நடுவதே சிலாக்கியமென்பது எல்லாருக்குந் தெரியும். 10 ஏக்கர் நிலம் நடுகை போடுவதற்கு ஒரு ஏக்கர் நிலம் நாற்றுப்பாவுவது கோதாவரி முதலிய வடதேச வழக்கம். மதுரை, திருநெல்வேலி முதலிய இடங்களில் 15 ஏக்கர் வரையில் நட ஒரு ஏக்கரே நாற்றுப்பாவுகிறார்கள். நாற்றங்கால் வயலை நன்றாக உழுது கருஞ்சேருக்கியே நெல்லை நனைத்துவைத்த தொண்ணூறு நாழிகைக்கு மேல் முளையதிகம் தோன்றுமுன் விதைக்க வேண்டும். நாற்றங்கால் பகலில் நீர்வடிந்து காய்ந்து இரவில் நீர் நிறைந்து இருத்தல் நலம். ஆஸ்திரேலியாவில் ஏக்கருக்கு 3 படி விதையும், சீனதேசத்தில் 4 படி விதையும், அமெரிக்காவில் 10 படி விதையும் விதைக்கிறார்கள். திருநெல்வேலி முதலிய தென் பாகங்களில் ஒரு ஏக்கருக்கு அறுபது படி விதைவரை விதைக்கிறார்கள் ஆனால் நன்றாகத்தான் விளைகிறது. ஆயினும் சாஸ்தி நிலம் வைத்திருப்பவர்கள் ஒரு ஏக்கர் நிலமாவது ஒவ்வொரு போகத்திலும பரீட்சைக்காக வைத்து விதை குறைவாகவும் மற்றும் பலவகையாகவும பரீட்சித்துப் பார்க்கவேண்டும். நாற்றங்காலில் அடர்த்தியாகாமல் கலக்கமாகவே விதைக்கவேண்டும் அப்போதுதான நாற்றுப் பலமாயிருக்கும். நெருங்கிவந்தால் ஊசிபோலாகும். நெல் வகைக்குத்தக்கபடி விதைத்த நாற்பது நாள் முதல் அறுபது நாளைக்குள் நாற்றைப்பிடுங்கி நடவேண்டும். நம் நாட்டில் பல நெற்பயிரை ஒன்றாகச்சேர்த்து நடுகிறார்கள். இப்படி நடுவதன் காரணம் ஒரு செடி போனாலும் ஒருசெடி முளைக்குமென்பதே. இது தக்கதன்று. பல செடிகள் சேர்ந்து வளர்வதில் வேர் நெருங்கி ஊசிபோல வருவதால் பலன் குறையும். தனித்தனி நாற்று நடுவதே சிலாக்கியம். இப்படிச் செய்தால் பயிர் விரலளவு பருமனாகும். கிளைகள்

அதிகமாகும். கதிர் நன்ருயிருக்கும். நெல்லும் திரட்சியாகும். இப்படி நடுமுன்னமே பரம்படிப்பது மிக நலலது. பரம்படிப்பதால் நிலம் சமதளப்பட்டு எங்கும் ஒரே அளவாக நீர் நிற்கும். இதனுற்ருன் ''பரம்படியாத நெல் வெள்ளாமை பாழ் வெள்ளாமை'' என்பார்கள்.

*நீர் பாய்ச்சல்:—* நடுகை போட்டபின்பு பகலில் காயவிட்டு இரவில் நீர் நிரப்பிவரவேண்டும். களை பிடுங்கியபின்பு நமது நாடுகளில் இரண்டு அங்குல அளவு நீர் கட்டிவர வேண்டியது. அமெரிக்கர்கள் 6 அங்குலம் ஜலம் நிறைப்பர். நமக்கு அவ்வளவு வேண்டியதில்லையாயினும் இரண்டு அங்குலத்துக் காவது எப்போதும் நீர் இருந்துவரவேண்டும். கதிர் தோன்றிப் பால்பிடிக்கும்போது கட்டாயம் நீர் கட்டவேண்டும். அப்போது காய்ந்தால் சாவியாகும். பால்பிடித்தபின்பு காய்ச்சல் வந்தாலும் தோஷமில்லை. மற்றப் பயிர்களைவிட நெல்லுக்கு ஜலம் அதிகம் வேண்டுமென்பதே நம்மவர் கொள்கை. ஔவையார் அரசனை வாழ்த்தவேண்டியபோது "வரப்புயர" என்று வாழ்த்தி, வரப்புயர நீருயரும், நீருயர நெல்லுயரும், நெல்லுயரக் குடியுயரும், குடியுயரக் கோலுயரும், கோலுயரக் கோமான் உயர்வான், ஆதலால் வரப்புயர என்றதே ராஜ வாழ்த்தாகும் என்று பொருள் கூறினராம் இதனுல் வரம்பு செவ்வையாகப்போட்டு நீர்கட்டிவர வேண்டுமென்பது தொன்றுதொட்டு நமது கொள்கை. கால்வாய், குளம் முதலிய பாசனங்களில் இரண்டு அங்குல நீர் போதுமானதாயினும் கிணற்றிறவைகளில் சற்று அதிகமாகவே நீர் கட்டவேண்டும். கிணற்றுநீர்ப் பாசனங்களில் உரம் அதிகமாகப் போடவேண்டும். ஆற்றுநீர்ப் பாசனங்களில் புதுவெள்ளத்தில் வண்டல் கலந்துவரும். காவிரிப் பாசனத்தில் புதுவெள்ளம் வந்தபோது வயல் நிறையக்கட்டிவைத்து வடித்துவிட்டால் வயலில வண்டல் படிந்துறைவது தெரியும். இஃதென்ன ஆச்சரியம்! நீர்கலங்கி மண்கலந்து வருவதே நிதர்சனமாகும். கதிரறுப்புக்கு இரண்டு வாரத்துக்குமுன் முதல் அறுப்புவரை நீர் கட்டாமல் நிலத்தைக் காயவைக்கவேண்டும். காய்ந்தால் தான் ஜனங்கள் நின்று அறுவடை வேலை நடத்த அனுகூலப் படும்.

**களையெடுப்பு:—** "களை பிடுங்காத பயிர் காற்பயிர்" என்பது பழமொழி. நாற்று நட்டு 15 நாளைக்குமேல் முதற்றரம் களையெடுக்க வேண்டும். அதன்பின் 30 நாளைக்குமேல் மறுபடி இரண்டாந்தரம் களையெடுக்க வேண்டும். சிலவிடங்களில் மூன்றுந்தரமும் களையெடுப்பதுண்டு. வயலிற் பாயும் நீருடன் களைக்குரிய வித்துக்கள் வந்து சேர்ந்தும், பட்சிகளாலும் மற்றும் பலகாரணங்களாலும் களைச்செடிகள் முளைக்கின்றன. களையைப் பிடுங்காதுவிட்டால் நெற்பயிருக்குரிய நீரையும், உரத்தையும் களைப்பயிர் சாப்பிடுவதால், நெல்லுக்கு வேணடிய நீரும் உரமுங் குறையும். ஒருவனுக்குப் போட்ட உண்வை வேறு ஒருவனும் சேர்ந்து சாப்பிட்டால் ஆகாரபோஷணை குறைவது இயல்புதானே. அதுமட்டுமல்ல, நெல் வேர் செல்லத் தக்க இடங்களில் களைவேர் ஊடுருவிப்போவதால் நெல் வேர் தாராளமாகச் செல்ல இடமில்லாதுபோகும். இவ்வகைக் காரணங்களால் களை வளர வளரக் களைவதே சிலாக்கியமாகும். நமக்குணவாகும் நெல் முதலிய தானியப்பயிர்கட்குச் சனியன் போலவரும் இச்செடிகட்கு நம் முதியோர்கள் களையென்று பெயரிட்டது மிக அருமையாயிருக்கிறது. களையென்றல் நீக்கிவிடு, பிடுங்கு என்று பொருளாம். பிடுங்கியெறிய வேண்டிய இச்செடிகட்கு இப்பெயர்வைத்த நம்மவர் புத்திக் கூர்மை வியக்கத்தக்கதொன்றல்லவா? தமிழ்ப் புராணங்களில் களையெடுப்பைப்பற்றி மிக விஸ்தாரமாகவும் வேடிக்கையாக வும் சொல்லியிருக்கிறார்கள். அவ்விடங்களில் படிக்கப்படிக்க மிக இனிமை தோன்றும். கொட்டைக்கிராந்தி, நீர்முள்ளி, பிரமதண்டி, ஆரை, நாய்க்கடுகு, கோரை, நீர்மேல் நெருப்பு, கொடிப்பாசி, வேப்பம்பாசி, துளிர்ப்பாசி முதலியன வயல்களிற் றோன்றுங் களைகளாம்.

**கதிரறுப்பு:—** கதிர் நெல்லில் பால்பிடித்து முற்ற, பயிர் நிலைகொள்ளாது சாயும். அறுக்கும்படியான காலத்தில் மிகவும் சாக்கிரதைவேண்டும். தாமதப்பட்டால் நஷ்டமாம். அமெரிக்கரும் ஐரோப்பியரும் யந்திரங்களைக்கொண்டே அறுவடை செய்கிறார்கள். அவ்வாறு நாம் இங்கே செய்யமுடியாது. அந் நாடுகளில் ஒரு வயல் சுமார் 5 ஏக்கர் முதல் 20 ஏக்கர் வரை யிருக்கும். இதனாலும், புழுதியாகவே அவர்கள் விதைப்ப தாலும் அவர்கட்கு அவ்வாறு செய்ய இயலும். சிறுவயலும்

சேற்றுப்பயிருமாகவிருக்கும் நமது நாடுகளில் ஜனங்களே அறுவடை செய்யவேண்டும். இப்படி அறுக்கும் அரிவாளுக்குப் பன்னரிவாள் என்று பெயர். இப்பக்கங்களில் இந்த அரிவாள் ஒருஅடி நீளம் வளைவாயிருக்கிறது. அநேகவிடங்களில் இரண்டு அடி நீளமுண்டு. நீளம் அதிகப்பட்டிருப்பதே நல்லது. மிகவும் கூர்மையாக இருக்கவேண்டும் வடதேசங்களில் கதிரறுப்பவர்கள் அரிவாளுடன் அதைக் கூர்மைப்படுத்தும்படி தீட்டத்தக்க சாணைக்கல்லும் எப்போதுங்கொண்டுபோய் அப்போதப்போது தீட்டிக் கொள்கிருர்களாம். இப்பக்கங்களில், அப்பழக்கமில்லை. கூர்மையாக விருப்பதற்கேற்ப அறுவடை சீக்கிரமாகும். ஆள்மானம் அதிகமாகாது. நம் நாட்டார்கள் அரிவாள் கூர்மையாகவும் நீளம் அதிகமாகவுமிருக்கும்படி சீர்திருத்த வேண்டியது முதன்மையானது.

**களமும் நெல் சேர்ப்பதும்:—** கதிர்களைக் கொண்டுவந்து சேர்த்து நெல் சேர்க்க இடம் விசாலமாக அமைக்கவேண்டும். நம் நாடுகளில் போதுமான இடம் களமாகவில்லை. கொஞ்ச இடத்தில் பலர் பலவகை நெற்கதிரைக் கொண்டுவந்து சேர்த்து வேலை நடத்துவதால் ஒருசாதி நெல்லுடன் வேறுசாதி நெல் கலந்துவிடவும் தூற்றுவதற்குப் போதுமான இடம் வாய்க்காமையால் ஒருவர் பொலி தூற்றுவதில் வரும் குப்பையும் பதரும் மற்றவர் பொலி நெல்லுடன் சேரும்படியாகவும் நேரிடுகிறது. பலசாதி நெல் கலக்காமல் பாதுகாப்பது குடித்தனத்தாருக்கு மிக நல்லது. விதை நெல்லில் இது மிக அவசியம் கவனிக்கவேண்டும். மற்ற நெல்லிலும் ஒரே சாதியாயிருந்தால் விலையேறும். பலசாதி கலந்தால் விலை குறையும். ஒவ்வொரு கிராமங்களிலும் போதுமானபடி நெல் அடிக்குங்களம் அமைத்துத்தரும்படி நமது கருணை தங்கிய கவர்ன்மெண்டார் கவனிக்கவேண்டும். நாமும் அவர்களிடம் பிரார்த்திக்கவேண்டும். ஜமீந்தார்கள், பிரபுக்கள் தாங்களே தங்கள் நிலங்களில் களத்துக்குப்போதுமான இடம்விட்டு ஏற்பாடு செய்யவேண்டும். இன்னும் வேண்டிய வகைகளியெல்லாம் ஊன்றி யோசித்து விவசாய முறை நூல்களை யங்கங்கே மாணுக்கர்கள் கற்கும்படி நாமே ஏற்பாடு செய்யவேண்டும். நிலம் அதிகமுடையவர்கள் மிகவும் இந்த முறைகளையனுசரித்து வருவது அவசியம். நாம் விவசாய விதிகளைக் கவனியாமலே

வீட்டிலிருந்துகொண்டு பண்ணையாளர்கள் வேலை செய்து கொடுப்பதைப் பெற்றுவந்தால் தக்கபடி லாபங்கிட்டுவதரி தாகும்.

**முடிவுரை:**

இன்னும் ஆராய்ச்சி வகையாலும் அனுபவ வகையாலும் பலவகையில் நெல் சாகுபடியை விருத்திபடுத்தவேண்டும். நிலம் அதிகமுள்ள மிராசுதார்களே இவ்விஷயத்தில் கவலை யெடுத்துக்கொண்டு தங்கள் தங்கள் குடியானவர்களுக்குங் கற்பித்துவருவது உத்தமம். திருநெல்வேலி ஜில்லா சிவகிரி ஜமீனில் சூப்ரிண்டெண்டு வேலை பார்த்த மகா-ா-ா-ஸ்ரீ அ. ராமராவ் அவர்கள் இவ்விஷயத்தில் ஆய்ந்து உழைத்து விவசாயம் நடத்தியதில் 376 ஏக்கர் நிலத்தில் 1306-ம் பசலி யில் 1694 கோட்டை நெல் விளைந்தது. (ஒரு கோட்டையென் பது பட்டணம் பக்காவுக்கு 126 படி) 1313-ம் பசலியில் 2222 கோட்டை விளைந்தது. 306-ம் பசலி முதல் 313-ம் பசலி வரை விளைவு அதிகரித்தே வந்தது. 8 வருஷத்துக்குள் 528 கோட்டை அதிகம் விளைந்தது. இக்காட்சி நம் விவசாயிகட்கு ஒரு பிரதம பாடசாலைபோலிருக்கின்றதல்லவா? ஜப்பான் தேசத்து நெற் பயிரில் சரிபாதி எடை வைக்கோலும் சரிபாதி எடை நெல்லு மிருக்கிறதாகவும், அமெரிக்காவில் இரண்டு பங்கு எடை வைக்கோலும் ஒரு பங்கு எடை நெல்லுமிருப்பதாகவும், கடப்பை, திருநெல்வேலி முதலிய சில இடங்களில் 4 பங்கு எடை வைக்கோலும், ஒரு பங்கு எடை நெல்லுமிருப்பதாகவும், தஞ்சை ஜில்லாவில் எட்டுப்பங்கு வைக்கோலும், ஒரு பங்கு நெல்லுமிருப்பதாகவும் மற்றும் பல அரிய விஷயங்களும் அக்கரிகல்ஜ்ஜுரல் இன்ஸ்பெக்டர் ஸ்ரீமத் ஜி. இராஜகோபால நாயுடு அவர்கள் தெரிவிக்கிறார்கள். தற்காலத்தில் அவர்கள் இவ்விஷயத்தில் மிகப்பாடுபட்டுத் தேர்ச்சிபெற்றுள்ளார்கள்.

நாமும் இவ்வாறே முயற்சி செய்தால் மேன்மை அடைவது நிச்சயம். நாடெங்கும் வாழக் கேடொன்றுமில்லை. எல்லாம் வல்ல இறைவன் திருவருளைக்கொண்டு நமது டிஸ்டிரிக்கட்டு (Agricultural Association) என்னும் விவசாய சங்கமானது நாளுக்குநாள் விருத்தியடைந்து நம் நாடே எல்லா நாடுகளிலும் சிறந்த ஒப்பற்ற பல வளங்களும் ஒருங்கே நிறையப் பெற்ற ஒரு நாடாகுக.

முற்றிற்று.

இங்ஙனம்,

**எம். கே. எம். அப்துல்காதிறு ராவுத்தர்,**

**Committee Member of the Madura District Agricultural Association, Madura.**

## கடந்த நூற்றைம்பது ஆண்டுகளுக்குள்
# இளையான்குடியில் வாழ்ந்த புலவர்கள்

| பெயர் | எழுதிய நூல்கள் |
|---|---|
| **இளையான்குடி** | |
| 1. மதாறுப் புலவர் | சேதுபதி ஏலப்பாட்டு, திருக்காரணச் சிங்காரக் கும்மி, குத்புமணி மாலை |
| 2. தென்மலைக்கான் மதுரகவி பாட்சாப் புலவர் | நாகைமணி மாலை, நாகூர் மீரான் பிள்ளைத்தமிழ், நாகைப்பத்து, நாகைக் கொச்சகம், நாகைத் திருவாசகம் ஆகியவை அடங்கிய பல பாடல் திரட்டு. |
| 3. மஸ்தான் என்ற லுக்குமான் | ஞானப் பாடல்கள் பல பாடியுள்ளார். |
| 4. கச்சிப்பிள்ளையம்மாள் | மெஞ்ஞானக்குறம், மெஞ்ஞானக் குறவஞ்சி, மெஞ்ஞான ஊஞ்சல், மெஞ்ஞானக் கும்மி ஆகியவை அடங்கிய மெஞ்ஞான மாலை என்னும் நூல். |
| 5. செ. அ. சீனியாபில் ராவுத்தர் | தீன் விளக்கச் சந்தமாலை, சிங்காரவழிநடைச்சிந்து, சிங்கார வழிநடைலாவணி, காட்டுவா சாகிபு காரணச்சிந்து. |
| 6. கருத்தத்தம்பி என்ற பண்டித பாஸ்கர ப. கா. செய்யது அப்துல் காதிறு புலவர் | சாற்றுக் கவிகள், தனிப்பாடல்கள், சிவகங்கை மன்னர் துரைச்சிங்கம் பேரில் புகழ்ப் பாமாலை, ஆகியவைபாடியுள்ளார். |
| 7. போ. நா. இ. காஜா முகியித்தீன் | அரசியல், சமுதாயம், மற்றும் பக்திப் பாடல்கள் பல பாடியுள்ளார். |
| 8. முகம்மது அபுபக்கர் | முகியித்தீன் ஆண்டவர் பேரில் சதகமணி மாலை. |
| 9. ஸ்ரீலஸ்ரீ சிவானந்த சுவாமிகள் (இளையான்குடி வேதாந்த மடதத்தின் தலைவர்) | கொடுமளூர் முருகன் திருப்புகழ், இளையான்குடி திருப்புகழ், இளையான்குடி மாறநாயனார் புராணம், குட்டய ஞானதேசிக சுவாமி பேரில் பாடிய ஸ்தோத்திரம், தட்சிணாமூர்த்தி ஸ்தோத்திரம், சற்குரு பாமாலை, அந்தாதி நூல்கள் பலவும் பாடியுள்ளார். |

| பெயர் | எழுதிய நூல்கள் |
|---|---|
| 10. சேகப்பா ஒலியுல்லா என்ற செய்குனு முகம்மது மீரா நாயகம் | பொது நீதிச் சாரம் |
| 11. மீரா அசன் கணக்கப்பிள்ளை | முகைதீன் ஆண்டவர் கொடிப் பாட்டு பாடியுள்ளார். |
| 12. நாகூர்க்கனிஇராவுத்தர் | மெஞ்ஞான மஞ்சரி |
| 13. இராஜம்மாள் | சேகப்பா ஒலியுல்லா பேரில் பதிகம் பாடியுள்ளார். |
| 14. சாலையூர் சேக்பரீத் | கிடைக்கவில்லை |
| 15. லாஸ்காஸ் சிராய் இஸ்மாயில் | கிடைக்கவில்லை |
| 16 புலவர் பெரி. காசிம் | கிடைக்கவில்லை |

## புதூர்

| | |
|---|---|
| 17. போ. நா. சீனி முகம்மதுப் புலவர் | அல்ஹம்து பதிகம், ஞானனந்தக் களிப்பு, இரங்கூன், நாகூர் கந்தூரிப் பாடல்கள்பாடியுள்ளார். |
| 18. வாத்தியார் அல்லாபிச்சை புலவர் | புதூர் நகரச் சிறப்பு பற்றி பாடல் மற்றும் தனிப் பாடல்கள் பலவும் பாடியுள்ளார். |
| 19. முகம்மது மீரான்புலவர் | தத்துவானந்ததீபம் |
| 20. பூ. மு. முகம்மது மஸ்தான் | ஞானப் பாடல்கள் பாடியுள்ளார். |
| 21. ந. அப்துல்லா லெப்பை | கிடைக்கவில்லை |
| 22. ந. அ. இஸ்மாயில் லெப்பை | தனிப் பாடல்கள் பாடியுள்ளார். |
| 23. முகம்மது அமீர் சாகிப் | மெஞ்ஞானபோதம் |

| பெயர் | எழுதிய நூல்கள் |
|---|---|
| 24. கருத்தலெவ்வை என்ற முகம்மது அப்துல்லாஹ் ஆலிம் (உரைநடை ஆசிரியர்) | 'காஜியும் கள்வனும்' என்ற அரபு நூலைத் தமிழாக்கம் செய்துள்ளார் |

**சோதுகுடி**

| | |
|---|---|
| 25. எம்.கே.எம். அப்துல் காதிறுப் புலவர் (மதுரைத் தமிழ்ச் சங்க வித்துவான்) | மதுரைத் தமிழ்ச்சங்க மான்மியம், மதுரைக் கலம்பகம், பரப்பிரம்ம பதிகம், விஜயன் அப்துல் ரகுமான் மீது அகப்பொருட்கோவை, பல்துறைக்கோவை, நாகூர் நாயகர் பஞ்சரத்தினம், சரமகவி மஞ்சரி, மற்றும் சாற்றுக் கவிகள் பலவும் கற்பு, நெல், ஈகை, வித்யாதானம், வறுமையிற் செம்மை, இந்தியா இறைமாட்சி, இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பல் ஆகிய கட்டுரைகளும் எழுதியுள்ளார். |
| 26. பக்கீறுமதார்ப் புலவர் | இராஜமணி மாலை, முகியித்தீன் மாலை. |